Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 30 (27.10.2003) திங்கட்கிழமை இதழ்:27

### திருகோணமலை - மூதூர் பகுதியில்

## தமிழர் - முஸ்லிம்களிடையே மோதல்; மூன்று பேர் காயம், லொறி தீக்கிரை!

திருகோணமலை - மூதூர் பகுதியில் முஸ்லிம்களின் தாக்குதலுக்கு இலக்காகி நேற்று மூன்று தமிழர்கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தையடுத்து முஸ் களுக்குச் சொந்தமான லொறி ஒன்று தீக்கிரை யாக்கப்பட்டது.

இந்தச் சம்பவங்களால் ஏற்பட்ட பதற்றத்தைக் கட் டுப்படுத்த அங்கு ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட் டுள்ளது.

இந்தத் தாக்குதலில் மூதூர் மத்திய வீதியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை தனேந்திரன் (வயது 44), புண்ணியமூர்த்தி மதனமூர்த்தி(வயது 22) ஆகியோரே வெட்டுப்பட்டு, படுகாயங்களுக்குள்ளானவர்கள் ஆவர். காயமடைந்தவர்கள் திருகோணமலை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தாக்குதலில் காயமடைந்த மதனமூர்த்தி திருகோண மலை மாவட்ட வைத்தியசாலையில் சிற்றூழியராகக் கடமையாற்றுபவர். இவரை மூதூரிலிருந்து திருகோண மலைக்கு படகு மூலம் அனுப்பிவைப்பதற்காக, இவரது உறவினரான தனேந்திரன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை -அக்கரைப்பற்றிலும் மோதல்; இருதரப்பிலும் 5 பேர் காயமடைந்தனர்!

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் - முஸ் லிம்களுக்கும், தமிழர்களுக்குமிடையே நேற்று நடை பெற்ற கைகலப்பில் 3 முஸ்லிம்களும், 2 தமிழர்களும் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கடந்த 12 ஆம் திகதி அக்கரைப்பற்று வட்டமடுவில் உள்ள முஸ்லிம்களின் வயற்காணிகளில் - அந்தக் காணிகளின் உறுதிகளை வைத்திருப்பவர்கள் நெற் செய்கையை மேற்கொள்ளலாமென புலிகளுக்கும், முஸ்லிம்களுக்குமிடையில் நடந்த சந்திப்பில் தீர்மானிக் கப்பட்டது.


இதன்படி 231 முஸ்லிம்கள் காணிகளின் சொந்தக் காரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு, நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நேற்றைய தினம் மேற்படி 231 பேரும் தமது வயற்காணிகளைத் துப்புரவு செய்யச் சென்றவேளை, அங்கு நின்ற சிலர் - இவர்களைச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியதுடன், இவர்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன், மனோ கணேசனுடன் தமிழ்ச்செல்வன் நேற்றுச் சந்திப்பு!



சந்திரசேகரன் தலைமையிலான குழுவினர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது....



மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது....

(கிளிநொச்சி)

மலையக மக்கள் முன்னணி மற்றும் மேல் மாகாணமக்கள் முன்னணிஆகிய கட்சிகளின் தலைவர்கள் -அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சு நடத்தினர்.

கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறை தலைமைச் (10 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து ஆனந்தசங்கரி உடனடியாக விலகவேண்டும்!

## அந்தக் கட்சியின் மட்டக்களப்புக் கிளை தீர்மானம்

(மட்டக்களப்பு)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பதவியிலிருந்து ஆனந்த சங்கரி உடனடியாக பதவிவிலக வேண்டும். இல்லையேல் செயலாளர் மத்திய செயற்குழுவைக் கூட்டி அவரைப்பதவியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி யின் மட்டக்களப்பு மாவட்ட கிளை ஏகமனதாக தீர்மானம் ஒன்றினை நிறை வேற்றியுள்ளது.**

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மட்டக்களப்பு கிளைக்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் நடை பெற்றபோதே இவ்வாறு தீர்மானிக் கப்பட்டது.

இந்தக்கூட்டத்தில் மத்திய செயற் குழு உறுப்பினர்கள் 9 பேர் உட்பட 21 பேர் கலந்துகொண்டனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் அல்ல என்று, கூறிய கருத்தை, மாவட்டகிளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனந்த சங்கரியின் கூற்றை மாவட்டக்கிளை வன்மையாகக் கண்டித்துள்ளது.

பொறுப்புவாய்ந்த பதவியில் இருக் கும் ஆனந்தசங்கரி முரண்பாடான கருத்துக்களை தெரிவித்து தமிழர் விடுதலைக்கூட்டணியை இக்கட் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய எழுச்சிப் பேரவையின் இரண்டாவது சங்கமம் நிகழ்வு

### யாழ். பல்கலையில் நேற்று நடைபெற்றது!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் இரண்டாவது பேராளர் சங்கமம் நேற்று யாழ்.பல்கலைக்கழ கத்தில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு, பல்கலைக்கழக கைலாசபதி கலை யரங்கில், தேசிய எழுச்சிப்பேரவை யின் செயலாளர் சூ.சிறில் தலைமை யில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தா பேராசிரியர் மோகனதாஸ், மாவீரர் ஆண்டானின் தந்தையார், அருட் திரு ஜெயக்குமார் அடிகளார் ஆகி யோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியினை யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஆசியுரைகளை (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் அச்சுறுத்தலால் 4 வீடுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு!

பருத்தித்துறைப் பொலிஸ் நிலை யத்தில் படையினருக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, அவர்கள் படையினரால் பழிவாங்கப் படும் ஆபத்து இருப்பதால், பருத் தித்துறை முனைப்பகுதியைச் சேர்ந்த நான்கு குடும்பங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை இரவு பருத்தித்துறை முனைப்பகுதியில் படையினரால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைய டுத்து அச்சம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நாளன்று படையினரால் முதலில் தாக்கப்பட்ட இளைஞரான பீற்றர் மாறன் மற்றும் அவருடைய உறவினர்களான நான்கு குடும்பங் களின் சார்பிலேயே பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டது.

தமது வீடுகளில் மீளக்குடியேற (10 ஆம் பக்கம் பார்க்க)

## இயல்பு நிலையினைக் கொண்டுவருவதே இடைக்கால நிர்வாக சபையின் நோக்கம்!

### தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின் சந்திரசேகரன் தெரிவிப்பு

இடைக்கால நிர்வாகம் என்பது ஒரு சிறிய அரசியல் கோரிக்கை யல்ல. ஆயுதம் ஏந்தி யுத்தம் செய் வதற்கு முன்னர், வடக்கு - கிழக்கில் என்ன நிலைமையிருந்ததோ, அந்த நிலைமை மீண்டும் ஏற்படுத்தவேண் டும் என்பதுதான் இடைக்கால நிர் வாக வரைபில் குறிப்பிடும் கோரிக்கை யென தமிழ்ச்செல்வன் தெரிவித்த தாக மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந் திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் வன், மலையக மக்கள் முன்னணி மற்றும் மேல் மாகாண மக்கள் முன் னணி பிரதிநிதிகள் தனித்தனியாக சந்தித்து உரையாடினார்.

வரலாற்றில் முதல் தடவையாக (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1620)

எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# மாத்தளையில் டெங்கு நோய்; 62 பேருக்கு நோய்த் தொற்று!

மாத்தளை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் பரவும் ஆபத்து தோன்றியுள்ளதாக, சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மாத்தளையில், 62 நோயாளிகளுக்கு டெங்கு நோய் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. இவர்களில் 6 மாத குழந்தையும் 30 பாடசாலை மாணவர்களும் இரு பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவதாக தெரிய வருகிறது.

டெங்கு நோய் பரவும் ஆபத்து மாத்தளை மாநகரசபைப்பகுதியில் ஏற்பட்டுள்ளதையடுத்து, டெங்கு ஒழிப்பு தினமாக நேற்றுமுன்தினம் மாத்தறை மாநகர மேஜர் சிறில் மிமொகமட் பிரகடனம் செய்திருந்தார்.

இந்த டெங்கு ஒழிப்புக் குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# போத்தல், கள் உற்பத்தி அனலைதீவில் அதிகரிப்பு

அனலைதீவு தென்னை, பனை வள அபிவிருத்திச்சங்க, போத்தலில் கள் அடைக்கும் நிலையத்தில் இவ்வருடம் அதிக எண்ணிக்கையான கள் போத்தல்களில் அடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையத்தில் இவ்வருடம் 18 ஆயிரம் போத்தல் கள் அடைக்கப்பட்டுள்ளது என்றும்- இது கடந்த காலங்களில் அடைக்கப்பட்ட போத்தல் கள்ளின் எண்ணிக்கையைவிட மிகவும் கூடுதலாகும் எனவும் கூறப்படுகின்றது.

மேலும், இங்கு பருவகாலங்களில் சீவப்படும் கள்ளில், விற்பனை செய்யப்பட்டு எஞ்சியவையே போத்தல்களில் அடைக்கப்பட்டு பின் இங்கு வைத்தே விற்பனை செய்யப்படுகின்றது.

தற்பொழுது ஒரு போத்தல் அடைத்த கள் இங்கு 25 ரூபாவிற்கு விற்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (83)

ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1619)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜீவா, ஸ்ரீதேவி நடித்த
தித்திக்குதே
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
T.TOX
(சி-1618)

## சீட்டிழுப்பு திகதி மாற்றம்

செவிப்புலன் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் சிறு கைத்தொழில் வளர்ச்சிக்காக நடத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. காலம் 26.11.2003 என்று திகதி சீட்டிழுப்பு நடைபெறும் என்று அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
க.சுரேந்திரந்தரன்

(515)

## நாட்டுக்கூத்து, இசை நாடக, கிராமிய கலைகளுக்கான போட்டி - 2003

(பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டியது)

**1. கூத்து இசை நாடகப் போட்டி (1 மணித்தியாலம்)**

தென்மோடிக் கூத்து/தென்மோடி தவிர்ந்த ஏனைய வகைக் கூத்துகள்/சிந்து நடைக் கூத்து/இசை நாடகம்.

பரிசுத்திட்டம் ஒவ்வொரு வகைக்கும் தனித்தனியே பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படும்.

1 ஆவது பரிசு ரூபா 5000, 2 ஆவது பரிசு ரூபா 3000, 3 ஆவது பரிசு 2000, ஆறுதல் பரிசுகள் 2. தலா ரூபா 1500 வீதம்

நான்கு வகைப் போட்டிகளுக்கான 1 ஆம் பரிசுகள் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் ரீ. கேதாரநாதன் நினைவாக வழங்கப்படுகின்றது.

**2. கிராமியக் கலை வடிவங்களுக்கான போட்டி (9-12 நிமிடங்கள்)**

கிராமிய நடனம் (கும்மி, கோலாட்டம் உட்பட/ஒயிலாட்டம்/மயிலாட்டம்/குதிரையாட்டம்/கரகம்/காவடி/கிராமியப்பாடல் (தனி) /கிராமியப்பாடல் (குழு) / வில்லுப்பாட்டு (30 நிமிடங்கள், 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு மட்டும்)

1 ஆவது பரிசு ரூபா 2000, 2 ஆவது பரிசு ரூபா 1000, 3 ஆவது பரிசு 750

**3. வாத்தியப் போட்டி (10 நிமிடங்கள்)**

ஆர்மோனியம்/உடுக்கு

1 ஆவது பரிசு ரூபா 2000, 2 ஆவது பரிசு ரூபா 1000, 3 ஆவது பரிசு ரூபா 750.

இவற்றுக்கான பரிசுகள் பாரம்பரிய கலை ஆர்வலர்களினால் வழங்கப்படுகின்றன.

**பொது விதிகள்**

1. இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. போட்டியில் ஆகக் குறைந்த 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வுகளே பரிசுக்குரிய அடிப்படைத் தகைமையைப் பெறும்.
3. விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய இறுதித்திகதி 15-11-2003
4. விண்ணப்பப் படிவங்களை பூபாலசிங்கம் புத்தகசாலை இல. 4 ஆஸ்பத்திரி வீதியில் பெற்று அதிலேயே விண்ணப்பிக்க வேண்டும்.
5. போட்டிகள் யாவும் மார்கழி மாத நிறைவுப்பகுதி அல்லது தை மாத முற்பகுதியில் நடாத்தப்படும்.
6. வில்லுப்பாட்டு, வாத்திய நிகழ்வுகளைத் தவிர ஏனையவற்றிற்கு வயதுக்கட்டுப்பாடு இல்லை.
7. மேலதிக விபரங்களை விண்ணப்பப்பத்திரத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
8. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

கலாபூசணம் செ.மெற்றாஸ்மயில்
செயலாளர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.
12/1, மூர்த்தவிநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்
தொ.பே.இ. 077-6095070 (514)

(மேற்படி விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்)

மங்களகரமான
புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு
எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நிகழும்
மங்களகரமான 2003 ஆம் வருடம் ஐப்பசித் திங்கள்
10 ஆம் நாள் (27.10.2003) திங்கட்கிழமை
மு.ப.9.50-11.45 வரை உள்ள சுபவேளையில்
இமேஜ் ஆட் சென்றம்
IMAGE ART CENTRUM
என்னும் பெயரில் ஓவிய ஊடகங்கள், கலை பொருட்கள், ஓவியங்கள், பாடசாலை உபகரணங்களுடன் புதுக்கடையொன்றைத் திறக்கவிருக்கின்றோம். அவ்விழாவில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை நாடும்



'கிருபா பில்டிங்'
கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில்.
ஆ.தீபன் திலீசன்
சி.பி.ம.ஆரோக்கியநாதன்.
(சி-1741)



புதுக்கடைத் திறப்புவிழா
இன்று 27.10.2003 திங்கட்கிழமை, மு.பகல் 9.30 (பு.நே) மணியளவில்
இல - 46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச முன்பாக)
திருநெல்வேலியில் அமைந்துள்ள
எமது
"திருமுருகன் கொம் நெற்"
என்னும் புதிய ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளதால்
வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அனைவரையும்
இவ்வைபவத்தில்பங்குகொண்டு சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்
இப்படிக்கு
தங்கள் நல்வரவை நாடும்
திரு.க.கலாதரன்.
021-222-2670
(சி-1740)

நமது ஈழநாடு நடாத்தும்
5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 2003 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கு
இடம்:- யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபம்
காலம்:- 2003.11.02 ஞாயிறுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம்
மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகளை அன்புடன் அழைக்கின்றோம்.
அனுசரணை வழங்குவோர்
ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
செலான் வங்கி
டிக்கிரி கணக்கு
SEYLAN BANK LIMITED
புதிதாக டிக்கிரிக் கணக்கு ஆரம்பிக்க விரும்புபவர்கள் கருத்தரங்கு மண்டபத்தில் ஆகக்குறைந்தது 100 ரூபா செலுத்தி ஆரம்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்
BANK OF CEYLON

# கண்காணிப்புக்குழுத் தலைவரின் ஆலோசனைகளை பின்பற்றவேண்டாமென முப்படைத்தளபதிகளுக்கு உத்தரவு!



## ஜனாதிபதி சந்திரிகா விடுத்தார்



(கொழும்பு)

**போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் - ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சனின் வழிகாட்டலையோ அல்லது ஆலோசனைகளையோ பின்பற்ற வேணடாம் என்று ஜனாதிபதி சந்திரகா குமாரதுங்க- முப்படைகளின் தளபதி களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

**இது தொடர்பான எழுத்துமூல உத்தரவை இராணுவத்ததளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத்தளபதி எயர்வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோருக்கு கடந்த வெள்ளி இரவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜெனரல் ட்ரைவ்கேவ் ரெலவ்சனை நீக்குமபடி, நோர்வே பிரதமர் ஜெல் மக்னே பொன்டவிக்கிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவசர கடிதம் அனுப்பியதையடுத்தே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கூட்டம் ஒன்றையடுத்து ஜனா திபதி சந்திரிகா, நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் ஊடாக நோர்வே பிரதமருக்கு இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்தார்.

ஜெனரல் ரெலவ்சன் கண்காணிப் புக்குழுவின் தலைவர் என்றவகை யில், நடுநிலையுடன் செயற்படுகிறாரா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளதாக வும் - இவரது செயற்பாடுகள் நாட் டின இறைமையைப் பாதிக்கக் கூடிய வகையில் அமைந்திருப்பதாகவும், புலிகளின் ஆயுதக்கப்பலை கடற் படையினர் தேடிச்சென்றது தொடர் பான தகவலை புலிகளுக்கு வழங் கியதால், அது தப்பிச்சென்று விட்ட தாகவும் ஜனாதிபதி சந்திரிகா குற் றஞ்சாட்டியிருந்தார்.

இதனால் கண்காணிப்புக் குழுத் தலைவர் பதவியில் ஜெனரல் ரெலவ்சன் தொடர்ந்து நீடிப்பது பொருத்தமற்றதாகக் கருதுவதாக வும், இப்பதவியிலிருந்து அவரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படியும், ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க - நோர்வே பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

கடந்த 16ம் திகதி சந்தேகத்திற் கிடமான புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றைக் கடற்படையினர் சுற்றி வளைக்க முற்பட்டபோது அது தொடர் பான தகவலைப் புலிகளுக்கு வழங் கியதாக கண்காணிப்புக்குழுவின் மீது கடற்படையினர் குற்றம் சாட்டி யிருந்தனர்.

புலிகளின் கப்பலைத் தேடிச் சென்ற கடற்படையினர் எஸ்.எல். என்.எஸ். பிரதாப் என்ற பீரங்கிப் படகிலிருந்த கடற்கண்காணிப்புப் பிரதிநிதி ஒலிவெசேனியஸ், இந்தத் தகவலை கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ் சனுக்கு செய்மதி தொலைபேசி மூலம் அறிவித்தார்.

இதையடுத்து ஜெனரல் ரெலவ் சன் கிளிநொச்சியிலுள்ள புலிகளின் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டு, கிழக்கு கடற்பரப்பில் புலி களின் கப்பலேதும் தரித்து நிற் கிறதா என விசாரித்ததாகவும் இத னால், புலிகளின் கப்பல் உசார டைந்து தப்பிச் சென்றுவிட்டதாகவும், கடற்படையினர் குற்றஞ்சாட்டியுள் ளனர். இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சில் நடந்த கூட்டத்தில் விரி வாக ஆராயப்பட்டதாகவும் -

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் கலாநிதி ஜோன் குணரட்ன மற்றும் கடற் படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இராணுவத் தளபதிக்கு பதவிநீடிப்பு ஜனாதிபதி முடிவுக்கு அரசு அதிருப்தி

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருப்பது குறித்தும், அவ ருக்கு கூட்டு கட்டளைத் தளபதி பதவி வழங்கப்பட்டிருப்பது குறித்தும் அரசாங்கம் சர்ச்சைகளை கிளப்பி யுள்ளது.

ஆனாலும், லெப்.ஜெனரல் லய னல் பலகல்ல தனது புதிய கடை மைப் பொறுப்புக்களை பொறுப் பேற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா பச்சைக் கொடி காண்பித் துள்ளார். லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல இன்று தனது புதிய அலு வலகத்தில் கடைமைகளை பொறுப் பேற்க இருப்பதாக, இராணுவத் தலை மையக வட்டாரங்கள் தெரிவித்தன.

முக்கியமான பாதுகாப்பு நடவடிக் கைகள், தலைமைப் பதவிகளின் நியமனங்கள் குறித்து அரசாங்கமும், ஜனாதிபதியும் முரண்பாட்டான கருத் துக்களை கொண்டிருக்கிறார்கள். பின்னர் இரண்டு தரப்பினருக்கும், இடையில் கடற்படை தளபதி அட் மிரல் தயாசந்தகிரிக்கு சேவை நீடிப்பு வழங்கிய விடயம் மோதல்கள் ஏற் பட்டிருப்பதாகவும்,

அத்துடன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில் வாவை பொலிஸ்மா அதிபர் பதவி யில் அமர்த்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுத்துவரு கிறார். இவரது நியமனத்தை ஐ.தே. கட்சி அரசாங்கம் எதிர்த்தபோதிலும், இது குறித்து ஜனாதிபதி சந்திரிகா கவலை கொள்ளவில்லை எனவும் தெரியவருகிறது.

கடந்த ஜூன் மாதம் ஜெனரல் றொகான் தளுவத்த சேவையில் இருந்து விலகிய பின்னர், வெற்றிட மாக இருந்த கூட்டு கட்டளைத் தள பதி பதவி முதன் முறையாக சேவை யில் உள்ள இராணுவத் தளபதி ஒருவருக்கு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம்!



### பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று அமைச்சர், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க இந்தியாவை விட வேறு எந்த நாட்டாலும் முடியாது என்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டார்.

விவசாயத்துறைக்குப் பதிலாக கைத்தொழில்சாலைகளையும், சுற்றுலாத்துறையையும் அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (01)

## மன்னாரில் இளம் குடும்பப் பெண் மீது பொலீஸார் பாலியல் வல்லுறவு முயற்சி

(மன்னார்)

மன்னார் - உயிலங்குளத்திற்கரு கில் கடந்த வியாழக்கிழமை பொலி ஸார் மூவர் தனித்திருந்த குடும்பப் பெண் ஒருவரை பாலியல் வல்லுற வில் ஈடுபடுத்த முயற்சித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவ தாவது, உயிலங்குளத்திற்கருகி லுள்ள பஸ்தரிப்பில் நின்ற இந்த மூன்று பொலிஸாரும் - அருகிலிருந்த வீட்டில், குடும்பத் தலைவன் வீட்டி லிருந்து மன்னார் பக்கம் செல்வ தைப் பார்த்திருந்த பின்னர், அந்த வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

அந்த வீட்டில் நின்ற சிறுமியிடம் பணம் கொடுத்து அருகிலுள்ள கடை யில் இனிப்பு வாங்கி வருமாறு கூறி அனுப்பிவிட்டு, அந்த வீட்டில் இருந்த பெண்ணுடன் பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக் கையினை அடுத்து அந்தப் பெண் கூக்குரலிடவே, மூன்று பொலிஸா ரும் தப்பியோடிவிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட பொலிஸார், முருங்கன், உயிலங்கு ளம், மன்னார் நகரம் இடங்களி லுள்ள பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படு கிறது. (201)

## பாதுகாப்பு ஆலோசனைகளால் தான் பேரணியை சந்திரிகா தவிர்த்தாராம்!

### ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

பெருமளவு மக்கள் கூடும் இடங் களுக்கு செல்லவேண்டாம் என்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வுக்கு பாதுகாப்பு ஆலோசகர்களால் ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதா கத் தெரியவருகிறது.

இதனால்தான், கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த ஆர்ப்பாட் டப் பேரணியின்போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதில் பங்கு பற்றவில்லையென்று ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையான பொ துமக்கள் கூடுகின்ற இடங்களில், கரும்புலிகளின் அணிகள் ஊடுருவி யிருப்பதாக கொழும்பு பொலிஸாரின் புலனாய்வுத் தகவல்கள் உறுதிப் படுததியுள்ளன என்று, அவர் மேலும் தெரிவித்தார்.

## செய்மதித் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்கு கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கமுடியாது

### பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு



எதிர்காலத்தில் இலங்கைக் கடற்பரப்பில் சந்தேகத்துக்கு இடமான கப்பல்கள் சோதனையிடப்படுமாக இருந்தால், கடற்படையினரின் கப்பல்களில் செல்லும் கண் காணப்புக் குழுவினர் செய்மதித் தொலைபேசிகளை எடுத்துச் செல்வதற்கு, வசதி யினை ஏற்படுத்திக் கொடுக்கப்போவதில்லை என - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - கடற்படையினரின் கப்பல்களில் கண்காணிப் புக்குழுவினர் 24 மணிநேரம் இருக்க வேண்டும். இவை தொடர்பான விளக்கம் ஒன்றை ஒரு சிலதினங்களில் பிரதமருக்குத் தெரிவிக்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அண்மையில் இலங்கைக் கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான கப்பல் தென்பட்டதையடுத்து கண்காணிப்புக்குழுவிற்கு படையினரால் தெரியப்படுத்தப்பட்டது. எனினும் கண்காணிப்பு குழுவிற்கு இடையேயான தொடர்பாடலினை அவதானித்ததே புலிகள், தப்பிச் செல்வதற்கு காரணமாக இருந்தது என கடற்படையினர் குற்றஞ்சாட்டி இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் தமிழ் இளைஞர் முஸ்லிம்களால் தாக்கப்பட்டார்

திருகோணமலையிலிருந்து மூதூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் கங்குவேலி பகுதியில் வைத்து நேற்று முஸ்லிம் இளைஞர்களால் கடுமையாகத் தாக் கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 4.45 மணிக்கு மூதூர் நோக்கிச் சென்ற இவரை கங்குவேலி அல்கிலால் வித்தியாலயத்திற்கு அருகில் மறித்த முஸ்லிம் இளைஞர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர். தலையில் பலத்த காயத்துடன் கிடந்த இவரை அப்பகு திக்கு வந்த பொலிஸார் மீட்டு மூதூர் அரசினர் வைத்தியசாலையில் அனும தித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தினையடுத்து அந்தப் பகுதியில் சிறிது நேரம் பெரும் பதற்றம் நிலவியது. இத னைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை திருகோணமலையிலிருந்து மூதூருக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற கப்பலுக்கு பொலிஸாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. (04)

### வடமராட்சி கிழக்கில் குடிநீர் வசதி

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் - மீளக்குடியேற்றம் நடைபெற்ற பிரதேசங்களில் 'மூவிங் மொன்டோ' நிறுவனம் குடிநீர், சுகா தார வசதிகளினை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

முதற்கட்டமாக 60 கிணறுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. இப்பிரதேசங்களில் மீள அமைக்கப் பட்ட பாடசாலைகள் மற்றும் முகாம் களுக்கு முன்னுரிமை கொடுக்கப் படவுள்ளது. (122)

# பொதுச் சேவை அலுவலகங்களில் ஒழுங்கு கட்டுப்பாடுகளைப் பின்பற்றவும்

## அரச அதிபர் சுற்றுநிருபம் மூலம் அறிவிப்பு

பொதுச் சேவையில் சரியான ஒழுங்குக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வகையில், சகல பிரதேச செயலகங்களையும் சேர்ந்த அலுவலர்களுக்கும் பொதுவான சுற்றறிக்கை ஒன்று யாழ். அரச அதிபரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அலுவலகங்களின் தாமதித்த வருகை, அலுவலக நேரத்திற்கு முன்னதாக அலுவலகத்தை விட்டு வெளியேறல், கடமை நேரத்தில் சொந்தவிடயங்களில் ஈடுபடல் மற்றும் அலுவலக நேரத்தில் புறப்படும் நேரத்தை தினவரவுப் பதிவேட்டில் பதியாமல், மறுநாள் வந்து முதல்நாள் சென்றமைக்கான ஒப்பமிடல், கடமை நேரத்தில் தமக்கான இருக்கைகளில் இல்லாமல், வேறு அலுவவலர்களுடனிருந்து தனது கடமைக்கும், அவர்களது கடமைக்கும் பங்கம் விளைவித்தல், செய்தித்தாள், சஞ்சிகைகள், புத்தகங்கள் வாசித்தல், மதிய உணவுக்கு கூடிய நேரத்தைப் பயன்படுத்தல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி செயற்பாடுகளால், அலுவல்களை நிறைவேற்ற வரும் பொதுமக்கள் - சிரமத்திற்கு உள்ளாவதற்கும், அலுவலகத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவதற்கும் வழிசமைக்குமாதலால், இவற்றைத் தவிர்த்து, சேவையிலீடுபட்டு, பொதுச்சேவையில் சரியான ஒழுங்குக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த ஒத்துழைக்குமாறு அந்த சுற்றறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (113)



கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் மக்கள் வங்கியால் "சிசுஉதான" சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டபோது, அதில் கலந்துகொண்ட சாவகச்சேரி கிளை முகாமையாளர் பாலச்சந்திரன், பிராந்திய முகாமையாளர் சிவபாதவிருதையர் ஆகியோரைக் கல்விச் சமூகத்தினர் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# பயணிகளின் படகிற்கு கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது

நெடுந்தீவு - குறிகட்டுவான் பயணிகள் சேவையில் ஈடுபடும் நெடுந்தீவு.பல.நோ.கூ.சங்கப் படகிற்கு, கூடாரம் பொருத்தப்பட்டுள்ளது.

காலநிலை சீரின்மை மற்றும் மழைகாலம் தற்போது ஆரம்பித்துள்ளதால் பயணிகளின் பொருட்களும், பயணிகளும் மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து பயணம் செய்யவேண்டிய நிலையினைத் தவிர்க்கும் வகையில், தற்காலிக கூடாரம் அமைக்கப்பட்டுள்ளமையானது - பொதுமக்கள!டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தற்போது குழுதினிப்படகு பழுதடைந்துள்ளமையால், சங்கப்படகே சேவையில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. (113)

### சுயதொழில் முயற்சியாளருக்கு மானியம்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறும் 50 வயதுக்குட்பட்ட இளம் விதவைகள் - மாதாந்த உதவிப் பணத்தை நம்பி இராது, சுயமாகத் தொழில் ஒன்றைச் செய்வதற்காக - வடகிழக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களத்தால் 15 பேருக்குத் தலா பத்தாயிரம் ரூபா வீதம் - மானியமாக வழங்கப்படவுள்ளதாகச் சமூகசேவை அலுவலர் எஸ். இராசலிங்கம் தெரிவித்தார். (17)

# சட்ட விரோத வீடமைப்பு தடுத்து நிறுத்தப்பட்டது

புன்னாலைக்கட்டுவன் வடக்கு பொது இந்துமயானச் சுற்றாடலில், சட்டவிரோதமான முறையில் நிரந்தர வீடுகள் அமைக்க முற்பட்டவர்கள், தடுத்து நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மயானத்திற்கென வழங்கப்பட்டுள்ள காணியில், சிலர் வீடுகள் அமைத்து, வசித்துவருவதாகவும், அவர்களில் இரண்டு குடும்பங்களுக்கு நிக்கொட் நிறுவனம் நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்ட போது,

மயான அறங்காவலர் பிரிவால்-வலி.தெற்குப் பிரதேசசபையின், ஏழாலை உபஅலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பின், அவர்கள் தலையிட்டு நிரந்தர வீடுகள் - மயானப்பகுதியில் அமைக்கப்பட முடியாது எனக்கூறி, தடுத்து நிறுத்திய தாகக் கூறப்படுகின்றது.

அத்துடன், அண்மையில் இந்த மயானத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்ட உடலை, தகனம் செய்யவிடாது இங்கு குடியிருக்கும் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட இந்த மயானத்தின் எல்லைகளுக்கு, வேலி அடைத்துத் தருமாறு இப்பிரதேச மக்கள்- பிரதேசசபையிடம் கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (83)

# ஆதார வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் நியமனம்

(நவிண்டில்)

பருத்தித்துறை மாவட்ட ஆதார வைத்தியசாலையில் - தென்னிலங்கையிலிருந்து வந்த 4 வைத்தியர்கள் சேவையிலீடுபட்டுள்ளனர்.

மயக்க மருந்து கொடுப்பதற்கு ஒருவரும், பொது வைத்தியத்திற்கு இருவரும், பெண்கள் வைத்தியத்திற்கு ஒருவருமாக வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், எக்ஸ்றே பிரிவு கடந்த 5 மாதங்களுக்கு மேலாக அதற்குரிய நிபுணர்கள் இன்மையால் மூடப்பட்டுள்ளதையிட்டு, இம் மாவட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (116)

## பளை பாடசாலைக்கு நூலக கட்டடம் அமைப்பு

பளை மத்திய கல்லூரிக்கு - நூலக கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பாரிய சேதம் அடைந்துள்ள இந்தப் பாடசாலைக்கு, இந்தக் கட்டடம் பூர்த்தி அடையும் நிலையில் உள்ளதால், மாணவர் பயனடையும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. இந்த நூலக கட்டடம் - கணினி வசதியுடன் அமைக்கப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (115)


## வாழ்க வளமுடன்

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### நான்காவது அகவையில்

பெயர் : சி.சிவப்பிரியா
முகவரி : எழிலகம் ஆலடி, காரைநகர்.



### நான்காவது அகவையில்



பெயர் : சு.சுஜீவன்
முகவரி : சத்திரங்கை, கம்பர்மலை.

### பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------
பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ் சிறு செய்திகள்

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

நெடுந்தீவு உதவிஅரசாங்க அதிபர் பிரிவுக்கான மாதாந்த பிரதேச அபிவிருத்தி ஒழுங்கிணைப்புக் குழுக்கூட்டம் - நாளை மு.ப.11 மணிக்குப் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கல்வி, சுகாதார மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்களுடன், மின்விநியோகம், போக்குவரத்து சேவைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதுடன், இக்கூட்டம் தொடர்பான அறிவித்தல் ஏற்கனவே சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (113)

## விவசாய உள்ளீடுகள் விநியோகம்

பளை பிரதேச விவசாயிகளுக்கு மானியமாக விதைநெல், அடியுரம், யூரியா ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது காலபோக விதைப்பு ஆரம்பித்துள்ள வேளையில், கிளிநொச்சி செயலகம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ஒவ்வொரு மூடை நெல், ஒன்றரை அந்தர் அடியுரம், 2 அந்தர் யூரியா முதலியன வழங்கப்பட்டன. பளைப் பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து மீட்கப்பட்ட பல வயல்கள் ஆறு, ஏழு வருடங்களின் பின்னர் விதைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (115)

## வர்த்தக நிலையம் உடைத்து திருட்டு

மட்டுவில் சந்தியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு - அங்கிருந்த சவர்க்காரம், பால்மா பைக்கற்றுக்கள் மற்றும் சிகரெட் வகைகள் போன்ற, சுமார் 25 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மைக்காலமாக தென்மராட்சியில் பரவலாகத் திருட்டுக்கள் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (34)

## காணித் தகராறு வாள்வெட்டில் முடிந்தது

காணித்தகராறு காரணமாக வயோதிபர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கானார். முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - அதேஇடத்தைச் சேர்ந்த தருமலிங்கம் (வயது 60) எனும் வயோதிபரே கைகள் இரண்டிலும் வெட்டுக்காயங்களுடன் படுகாயமடைந்தார்.

நெடுங்கேணி வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்ட இவர், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கைகள் இரண்டிலும் காயமடைந்துள்ள இவரது கைவிரல்கள் மூன்று முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரிசளிப்பு விழா

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் ஜெயரத்தினம் நினைவு நாளும், கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (72)

## மூன்றாம் கட்டக் கொடுப்பனவு

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் - செம்பியன்பற்று வடக்கு, முள்ளியான், வத்திராயன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள குடும்பங்களுக்கு, 3 ஆம் கட்டமாக 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு நிதி வந்து சேர்ந்துள்ளதாக உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று கிராம அலுவலர் பிரிவுகளிலும், தலா இரு கிராமங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (122)

## தீவக வலய ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களில் "முரண்பாட்டுக் கல்வியும் தீர்வும்" தொடர்பான செயலமர்வில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான செயலமர்வு - எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல், மாலை 4.30 மணிவரை இரு பகுதிகளாக வேலணை சரஸ்வதி வித்தியாலய ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன், செயலமர்வில் பங்கு கொள்வதில் குறித்த ஆசிரியர்களுக்கு இடர்ப்பாடுகள் காணப்படின், அது பற்றி எழுத்துமூலம் செயலமர்விற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் தகவல் தருமாறு - ஆசிரியர் நிலைய முகாமையாளர் கேட்டுள்ளார். (83)

# வேள்வித் தீ

## இலக்கியச்சோலை

"சீ.... எப்பிடியிருந்தாலும் தமிழினி இப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்கக்கூடாது. நானும் தாய்மாமன் மகள் தாரத்திற்குச் சிறப்பானது எண்ணுற நினைப்பிலையெல்லோ சம்மதிச்சனான். ஆனால் அதுக்கு அவள்... அப்பிடியு யெண்டா... ஏனப்பா" ஜோனின் மனம் கடந்த காலத்தை நோக்கி அடியெடுத்து வைத்தது.

"ஹலோ ஆர் பேசுறது"

'உன்ரை அம்மாவடாவப்பு பேசுறன்னெல்லோவே" "ஆ.... அம்மாவே, எப்படி சுகங்கள். நாட்டிலை ஏதேனும் புதினமே' எங்கட நாட்டிலேயோ புதினம் கேக்கிற, அது சொல்லவேணுமோ. அது கிடக்க. ஜேர்மனிலை ஒரு புதினமும் இல்லையோ. நாங்களிஞ்ச அம்மாளத்தையிட கண்திறப்பால சுமகமாயிருக்கிறோம்டா மோன. அது கிடக்க நான் இண்டைக்கு சொன்னதை நீ காதிலயோ ஏத்தாம என்ன செய்யப் போறாய்''



தாயின் மனம் எதையோ அவாவி நின்றது. "அம்மா - நானும் யோசிச்சனான். நீங்க சொன்னாப் பேந்தென்ன. எங்கட அருணாசலம் மாமாவின்ர பெட்டைதானே. அதுசரி என்ர நம்பரைக் குடுங்கோவன் ஒருக்கா கதைக்கச்சொல்லி."

'எடேய், தம்பி அவள் நல்ல வடிவடா மோன' நல்ல குணம் அதுமட்டுமேயடா - பெடிச்சி இப்ப அவள் கம்பசுமாம் கண்டியோ. நான் கதைக்கச் சொல்லி விடுறனப்பு. ஆனா, ஆயத்தங்களைச் செய்யட்டுமோ. நீ... வர எழுதலாம் தானேயடா தம்பி...' 'அது சரி அம்மா நான எப்படியும் இப்ப கெதியில வந்திடுவன் தானே..."

'என்ன எங்கடை சந்தாதோட்டப் பள்ளிக் கூடத்தில ஐந்தாம் ஆண்டுவரை என்னோட கூடப்படிச்ச தமிழினி தானே, எனக்கு..., அப்ப இருந்தே சாடையான விருப்பந்தான, ஆண்டவன் சரியான நேரத்தில கைகொடுத்திருக்கிறான் போல. அந்தக்காலத்தில ஆண்டு மூண்டு படிக்கேக்க அவளின்ரை சட்டை "பாண்டை நான் இழுத்துப் பிடிக்க அவள் காவடி ஆடினபடி பள்ளிக்குப் போற என்ற தமிழினிக் குட்டிதானே. அவளே இண்டைக் கெனக்கு.." அவன் மனம் ஆனந்தத்தால் சுடர்விட்டது. கள்ளமறியாத வயதில், கவலை தெரியாது பாடசாலைப் போன அந்தப் பருவகாலம் அவன் மனத்திரையில் மங்கலாய்த் தெரிந்தது. 'வைர முத்துதண்ணயின்ற காணியுக்கை களவாய் மாங்காய் பொறுக்க, அவள் காலால வேலியில அடிச்சு, முள்ளுக்கம்பியளில இரண்டு கம்பியை அமர்த்தி, மேல ஒரு கம்பியைத்தூக்க, நான் இடையால உள்ளேபோய் மாங்காய் எடுத்து வாறது பள்ளியால வரக்க தினமும் முதல் வேலை இதுதானே' என்ற எண்ணம் தமிழினியை அவனுக்கு இனம் காட்டி வைத்தது. 'ஆனால்... அப்படியெல்லாம் ஒன்றாய்த் திரிந்த தமிழினியோ, என்னோட ஒன்றாய்ப் படிச்ச தமிழினியோ இப்படிச் செய்தவள்... ஏன்...' அந்தக் கேள்விக்கு மட்டும் அவனால் விடைகாண முடியவில்லை. 'அப்படியெண்டா... ஏனப்ப' அம்மா வடிவாத்தனே விசாரிச்சு முடிவெடுத்திருப்பா. அம்மாவோட முடிவில எந்தப் பிழையுமே இருக்காது. அது மட்டுமல்லாமல் அம்மாவுக்கு மேலால என்னோட நேராய்க் கதைக்கேக்க... எப்படியெல்லாம் கதைச்சவள். என்னில தனக்கு எவ்வளவு விருப்பம் இருக்கிறதாய் சொன்னவள்... அப்ப இதெல்லாம் பொய்யோ" அவன் மனம் மெழுகாய் உருகியது. அவள் கூறிய வார்த்தைகள் - அவன் செவியில் இப்பொழுதும் கேட்டுக்கொண்டேயிருக்கிறது.

'ஆ... எங்கட தமிழினிக்குட்டியே, எப்படிக்குட்டி சுகம்.' 'சுகமா இருக்கிறம்.' முதலில் அவளை நீண்டநாள் பிரிவு கதைக்கவிடாது வெட்கத்தைப் போர்த்தியது. 'தமிழினி... ஏ.எல்.படிக்கேக்க இந்தக்குரலைக் கேட்டதுக்கு, இண்டைக்குத்தான் திரும்பவும் அந்தக் கோகிலக் குரலைக் கேட்கக் கூடியதாய் இருக்கு. பிரிவுகள் எண்டைக்கும் நிரந்தரமானவயல்ல...'

ஜோன்மேரி, எனக்கு உங்களைத்தான் என்ர வாழ்க்கையில காணவேணுமென்றது, நீண்டநாள் ஆசை. ஆனால், அது ஒருதலைக்காதலாயே இருந்தது. அதை ஆண்டவன் தருனம் பார்த்து நிறைவேற்றி வைச்சிருக்கிறான்' என்ற போது, ஜோன்மேரிக்கு உலகமே இல்லைப்போலத் தெரிந்தது. நான் ஒரு அண்டவெளியில் பறப்பதாய் அவன் உணர்ந்தான். நீ விரும்புற குதிரையை விட, உன்னை விரும்புற கழுதை மேல் எண்ணுறவை. ஆனா, நான் விரும்புற குதிரையே என்னை விரும்புதெண்டா... அவன் ஆனந்தத்தால் அரிக்கப்பட்டான். 'தமிழினி, எனக்கு உங்களில அந்தக்காவடி ஆடின காலத்திலிருந்தே விருப்பம்'. என்ன... நீங்கள் சொல்லுறியள் எனக்கு விளங்கேல்லயே'. 'தமிழினிக்குட்டி, நாங்கள் மூண்டாம் ஆண்டு படிக்கேக்க, நீங்கள் என்னை வீட்டுக்கேற்றுக்க வந்து கூப்பிடேக்க... நான் வந்து உங்கட வெள்ள உடுப்பு இடுப்புப்பட்டியை இரண்டு பக்கமும் பிடிச்சு இழுக்க, நீங்கள் காவடியாடினபடி பள்ளிக்கு போறது உங்களுக்கு நினைவில்லையோ'. 'ஓம்... ஜோன் எனக்கு இப்பதான் அந்தக்காலம் நினைவுக்கு வந்தது. அப்ப பேந்தென்ன, அந்தப்பட்டி பிடிச்ச ஆளே இனி உன்னைத் தொட்டில் பிடிக்க வைக்கப்போறார் எண்ணுறியளோ'. ஜோன் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்தான். இன்னும் இவளிடம் தூக்கி வாரிப்போட்டு கதைக்கும் குணம் இன்றுவரை விட்டுப் போகவில்லை என்ற எண்ணம் அவனை வாய்விட்டு சிரிக்க வைத்தது அந்தக்கிழுகிழுப்பு, அசைப்பு, இழுப்பு, உழுப்பல் எல்லாம் அவளிடம் நிறைந்திருப்பது அவளது கதையில் அவனுக்குப் புரிந்தது.

'என்ன சிரிக்கிறியள்,' இல்லை உங்கட கதையை நினைச்சுத்தான். அப்ப பேந்தென்ன எங்கட தமிழினிக் குட்டி... இனி நாங்கள் ஒரு பல்கலைக்கழகம் தானே. அது சரி தமிழினி, யுனிவசிற்றியில 'எந்த இயர்'. 'நான் யுனிவசிற்றியில செக்கன்ட்டியர்'. ஆனா... குட்டி நான் வந்து எழுதிட்டு இரண்டு வரியம்கழிச்சு வந்து தான் கலியாணம் செய்யிறதா அம்மாட்டச் சொன்னான்'. 'அப்ப சரி, ஜோன் நானும் அதுதான் யோசிச்சனான். நீங்களே சரியா முடிவெடுத்திட்டியள்'. 'சரி, தமிழினிக்குட்டி நான் நாளைக்கு வெளிக்கிடுறன். அம்மா கேட்டதுக்காக நாங்கள் எல்லாருமா வாறசனி உங்கட வீட்டை வருவம். பெண் பார்க்க வேணுமாம். எனக்கு அப்படியில்லை, ஆனால் உலக நடப்பு அப்படியாம். என்னைப் பொறுத்தவரை நான் உங்படை போட்டோவையும் கண்டுட்டன். இனி என்ன, ஆனா அம்மாவைத் திருப்திப்படுத்த வேணுமே. நான் சிலோனுக்குச் சனிதான் வருவன். அண்டே உங்கட வீட்டையும் வருவன், எங்கட அம்மாவிட்டையும் சொல்லிவிடுங்கோ'. 'சீ.யூ, பாய்' பாய்'.

'ஹலோ... ஆர் பேசிறியள்', அது நான் ஜோன். தமிழினி நிக்கிறாவோ'. 'ஓ...ம், தமிழினிதான் சொல்லுங்கோ, ஜோன் எப்படிச்சுகம்' 'நான் சுகமாய்ச் சிலோன் வந்திட்டன் தமிழினிக் குட்டி இனி என்ன, இப்ப போனில, நாளைக்கு அதேநேரம் நேரில'.

அதுசரி ஜோன் - நானும் இப்பதான் கம்பஸாலை வந்தனான். நாளைக்கு நீங்கள் எல்லாரும் மத்தியானம்தானே வருவியள். நான் கொம்பியூட்டர் 'கிளாசுக்கு எயிற்றுக்குபோனால், நயின் தேடடிக்கு வந்திடுவன்'. 'ஓக்கே தமிழினிக்குட்டி, ஓக்கே பாய்' என்று என்னிடம் கொழும்பில நின்று கதைக்கேக்க கலகலப்பாக விடை எல்லோபெற்றவள். தமிழினி, அப்ப இப்படி பிரச்சினை எண்டாச் சொல்லி இருக்கலாமே. இறுதிவரை இறுக்கமான நட்பை, ஆழமான அன்பை, சுயநலமற்ற காதலைக் காட்டின தமிழினியோ இப்படிச் செய்திருக்கிறாள். இப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறாள். அவனால் அதை நம்பவே முடியவில்லை, வெயில் வெக்கை பிடிக்க, வெம்பி உருகும் ஐஸ்பழம்போல அவன் மனம் உருக உருக, கண்ணீர் - காரணத்தைத் தேடி ஓடிக்கொண்டிருந்தது.

என்ன அழகான வீடு, எந்தளவு பாசமான அண்ணன், உயிரை விட்டுத் துடிதுடித்துக் கொண்டிருக்கிற தாய், 'றெயிஸ் ரேசனுக்கு' டேற் டிசையிற் பண்ணப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட கூட்வாசல் சிவர், நல்வரவு என்று நளினமாகக் கூறும் கதவு, பேசிய வார்த்தைகளை மறக்கமுடியாது மேசைமேல் இருந்து துடித்துக் கொண்டிருக்கும் தொலைபேசி - இது எல்லாம் அவன் கண்ணில் அகப்பட்டுக்கொண்டன. ஆனாலும் எதற்காக இப்படி ஒரு முடிவுக்கு தமிழினி வந்தாள். அதுமட்டும் அவனால் புரிந்துகொள்ள முடியாத புதிராகவே இருந்தது. இப்படி என்று எனக்குத் தெரிந்திருந்தா - சிலோனுக்கு காலே எடுத்து வைச்சிருக்கமாட்டன். அவன் மனம் - அவனுக்குள்ளேயே குடைந்து கொண்டிருந்தது.

"தம்பி என்ரை அன்பு எல்லோவே ஜோன். நீ... நீ... கவலைப்படாதையப்பு... காலமை விடிய வெளிக்கிடேக்கையுமெல்லோவே, இண்டைக்கு எங்கட ஜோன் வருவாரெண்டு எந்தளவு பூரிப்போட வெளிக்கிட்டவள். இப்படிச் செய்வாள் எண்டு ஆரப்பு கண்டனாங்கள்" என்று அத்தை கூறிய வார்த்தை, ஜோனில் இன்னும் ஒருபடி கண்ணீர்ப் பெருக்கைக் கூட்டிக் கொண்டது. 'என்ன நடந்தது, அத்தை... வடிவாச் சொல்லுங்கோ...' என்றான். கதை கேட்கமுடியாது கவலை அவனை மூடிக்கொண்ட நிலையிலும், 'என்ரை பிள்ளையெல்லோவே நீயடாப்பு. அவள் கொம்பியூட்டர் கிளாசெண்டெல்லே சொல்லிப்போட்டு எட்டு மணிக்கு போனவள். தமயன் அங்க காணல்ல எண்டு போன் பண்ணத்தான் எனக்கு இவள் இன்னும் ரியூசனுக்குப் போகயில்லை எண்டு தெரிஞ்சுது. ஆனா, நீங்க வாறபடியா ஆரும் பொடி பெட்டையளட்டைப் போய்ட்டாளோ எண்ட நினைப்பில எல்லோ நான்... நீங்கள் எல்லாரும் வரப்போறியள் எண்ட அவரசத்தில எல்லோவே... சமைச்சுக்கொண்டு நிண்டனான். அப்பவும் மோட்டச்சயிக்கிள் சத்தம் கேட்டது. எட்டிப் பார்க்க இவள் வந்தவள். நான் பிள்ளை வந்திட்டாள்தானே எண்ட நினைப்பில, இவளைக் கவனியாமல் சமயலைக் கவனிச்சன்... அப்பதான் உங்கட வான் சத்தம் போடவும், வித்தியாசமான ஒரு மணம் பரவவும் சரியாகக் கிடந்தது. 'இஞ்சாலை வந்தெடாப்பு...' எண்டளவில் மீண்டும் உயிருக்காகப் போராடத் தொடங்கிவிட்டாள்' தமிழினியின் தாய். அவளிடம் சுயநினைவு மீண்டும் இல்லை.

அந்நிய நாட்டில், அந்நிய மொழி பேசி, அந்நியப் பண்பாட்டைப் பேணி வாழுகின்றபோது - தாய் நாட்டுப் பண்பாட்டை, பாரம்பரியத்தை, தனித்துவத்தை மறக்காது, அத்தை மகளை மணக்க வந்த அவன், ஒன்றிலும் கோழை அல்ல. ஆளுக்கும், அறிவுக்கும் ஏற்ற பரந்த முகம். கம்பீரத்தொனியைக் காட்டும் மட்டான மீசை. அவனின் உள்ளத்தைக் காட்டும் தோலின் தூய்மை - இத்தனையும் தமிழினியால் ஏங்கிய இதயமும் - தூங்கிய தூய்மையாய் போய் விட்ட, நிம்மதியாய் பொய்த்து விட்ட, காதலாய் நிற்பதை... அவனால் ஏற்கமுடியவில்லை. ஒவ்வொரு அடியாய் அறையை நோக்கி எடுத்து வைத்தவனை, எட்டித் தள்ளியது ஈமத்து மணம். உன்னி அடியெடுத்து வைத்தவனால் உருக்குலைந்து கிடக்கும் தமிழினியைப் பார்க்கவே முடியவில்லை. 'துடுக்கான நடை, கோகிலத்தை ஒத்த குரல், வசீகரமான தோற்றம்' இன்று எப்படி, என்ன காரணத்தால் கரித்துண்டம்போலக் கிடக்கிறது. திரும்பியவனின் கண்ணில் மோட்டார் சைக்கிளால் பெற்றோல் வெளியே எடுக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தெரிந்தன. அதைப்பார்க்க நினைத்து குனிந்தவனை "இது என் அத்தானுக்கு" என்ற எழுத்தோவியம் திகைப்படைய வைத்தது. பிரித்துப் பார்க்கிறான்.

"உங்கள் வாழ்க்கை துணைவியாக முடியாது போன தமிழினி எழுதிக் கொள்வது "

இதுவரை என் மரணம் கொலையா? இல்லை தற்கொலையா? என்பது பற்றி நீங்கள் அனைவரும் சிந்தித்தபடி இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். ஆனால், என்னால் என்னிலை பற்றிச் சிந்திக்கமுடியாது. எது நடக்க கூடாதோ? எது நடந்தால் உயிர்வாழ முடியாதோ? அதுநடந்துவிட்டது. இது எனக்கு மட்டுமல்ல. இதுவேதான் ஈழத்து தமிழ்ச் சமுதாயப் பெண்கள் அனைவரதும் தலைவிதியோ தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை இந்த விடயத்தை எப்பிடி எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் உங்கள் ஆத்மதிருப்திக்காக எழுதுகிறேன். என்னை, வீடுவரை வரவழைத்து, வீட்டுக்குள் கரித்துண்டாகப்போவது முறையோ என நீங்கள் நினைக்கலாம். ஆனால், அப்பிடிய அல்ல நடந்த சம்பவம். நான் காலமை எட்டு மணிக்கு கொம்பியூட்டர்க் கிளாசுக்குப் போய்க்கொண்டிருந்தேன். என துரதிஷ்டம் எங்கட பல்லப்ப 'பொயின்ரில' நான் அண்மிக்கும் நேரம் எந்த சனநடமாட்டத்தையுமே காணயில்லை. ஆனாலும் என்ன, எங்கட சகோதரர்கள் தானே என்ற நினைப்பிலயெல்லோ மனம் பயப்பட்டாலும், மனத்தை சமாதானப்படுத்திக் கொண்டு வந்தேன். அதில் நிண்டவன் என்னைப் பார்த்தது - எனக்கு விபரீதமாகவேபட்டது. எனினும், என்னால் என்ன செய்யமுடியும். 'பொட்டக்கின்ட அய்டன்ரிக்காட் தியனவத' ஓம் சேர் என்று மரியாதையாக நீட்டினேன். என் அய்டன்ரிக்காட் நீட்டிய வலக்கரத்தை ஒரு கொடூரமான கை பிடித்தது. வலுக்கட்டாயமாகப் பறித்தேன். எனினும், பெரியதுரை வரட்டாம். போகேலாது என இருமல்லர்கள் தமக்குத் தெரிந்த தமிழில் எனக்குச் சொல்லிக்கொண்டனர். நானும் நிண்டேன். அவ்வளவுதான், இருவரும் என்னை வலுக்கட்டாயமாக இழுத்தனர். என்னால் இயன்றவரை முயற்சிசெய்தேன். என் முயற்சி தோல்வி கண்டது. கூறமுடியாத, கூறநாக்கூசும், அருவருக்கத்தக்க மிருகக் காடையர்களின் அராஜகம் என்னில் அரங்கேறியது. இனி அந்த வடுக்களை என்னுடைய எந்த உறவும் காணக் கூடாது என்ற தீராத சிந்தனையாகத்தான் என்னை நான் தீக்கிரையாக்கினேன். அதனால் நீங்கள் என்னை கரித்துண்டாக காணுவீர்கள் என நினைக்கிறேன். தயவுசெய்து என்னை விட்டு விடுங்கள் நான் நிம்மதியாக உறங்குவதற்கு. ஆனால், ஒன்று எனக்காக யாரும் நீதி கேட்க வேணடாம். ஏனென்றால், வழக்காளிகளே சிலவேளை குற்றவாளிகள் ஆகமுடியும். ஏனென்றால், இன்று எம்மவர் தலைவிதி அதுவே. ஆனாலும், நீதித்தீர்வு என்பது நீண்ட தூரத்தில் இல்லை. என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும் - அன்றுதான் மீண்டும் என்னால் சுவாசிக்கவாவது முடியும் என்று கூறிமுடிக்கிறேன். எனக்கு கண்ணீரோ, கவலையோ இல்லை. மாறாக நிம்மதிப் பொருமூச்சு என்னிடம் குடிகொண்டுள்ளது. ஏனென்றால், என் வடுக்களை இந்த உலகு காணாததால். 'இழிவரின் வாழாத மானம் உடையாரை ஒளிதொழுது ஏத்தும் உலகு' என்ற குறளை நேசித்து வாழ்பவர்கள் நீங்கள் என நினைக்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு

உங்கள் அன்பின் தமிழினி

கடிதம் வாசித்த ஜோனிடம் கவலையில்லை, கண்ணீரில்லை. இரத்த ஓட்டம் மட்டும் உடலில் கூடிக்கொண்டது. அவன் தனது வாகனத்தில் எங்கோ போகிறான். மற்றையோர ஏன் அவனை வெறித்துப்பார்க்கிறார்கள்.

**செல்வி கோதண்டபாணி சுரேகா**

# நூல் அகம்

## கூலிக்கு வந்தவன்




கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய "கூலிக்கு வந்தவன்" எனும் நாவல் - தூண்டி இலக்கிய வட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, அன்னைத் தமிழீழ மண்ணில் அருந்தமிழ் கவிஞராகவே ச.வே. பஞ்சாட்சரத்தை நாங்கள் கண்டிருக்கிறோம். அதற்கும் மேலே ஒருபடி சொல்வதாக இருந்தால் - பண்டிதராகவும், ஒரு நல்லாசிரியருமாகவே பலர் ச.வேயை அறிந்துள்ளனர்.

நான் ஒரு நல்லாசிரியன் மட்டுமல்ல, நாவலாசிரியனும் கூடவென சொல்ல விழைகிறார் கவிஞர் ச.வே. முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட நூல்தான் "கூலிக்கு வந்தவன்" நாவல். என்றைக்கோ அச்சுவாகனம் ஏற வேண்டிய நூல், இன்று "தூண்டி" மூலமாக அச்சில் வெளிவந்திருக்கிறது.

காலங்களைக் கடந்து "கூலிக்கு வந்தவன்" இவன் என்பதை, எழுத்தாளர் செங்கை ஆழியான் - ஒருவகையில் கவிஞரின் பலமெனவும், இன்னொரு வகையில் பலவீனம் எனவும் குறிப்பிடுகின்றார். அதில் தவறேதும் இல்லை.

பல ஆண்டுகளாக அருமையான நூலை வெளியிடாமலே வைத்து, அதன் மூலம் பல நாவல்களைத் தராமல் தவறியமை கவிஞரின் பலவீனம் என எண்ணுகிறார்கள் போலும் செங்கை ஆழியான்.

பலமெனும்போது செங்கை ஆழியான் மட்டுமல்ல, நாவலைப் படித்த பலரும் ஒன்றைத் தெளிவாகக் கூறுகிறார்கள். அதாவது, ஏறக்குறைய நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் உருவெடுத்த கருவை வைத்து, உருக்கொடுக்கப்பட்ட நாவல் இன்றும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும், சுவைக்கக் கூடியதாகவும் உள்ளது என்பதே அது.

ஆம். நாவலாசிரியர் சமுதாயத்திலே மாலிவாகப் பரவிக் கிடந்த சாதிச்சண்டைகள், வர்க்க பேதங்கள், வேலையில்லாத் திண்டாட்டங்கள் எனும் இன்னோரென்ன பிரச்சினைகளைத் தனது பேனா முனைக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

காலங்கள்தான் கடந்து போயிருக்கின்றன. ஒரு வகையில் எமது கோலங்கள் இன்னும் மாறவில்லை என்பதே உண்மை. மாட்டு வண்டியில் பயணம் செய்தகாலம் போய், இன்று விண்ணுக்குப் பயணம் செய்யும் காலம். இன்றும் எமது தேசத்தில் எங்கோ ஒரு மூலையில் சாதிப் பிரச்சினைகளும், வர்க்க பேதங்களும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அதனால், மனிதர்கள் செத்தார்களேயொழிய, அவை இன்றும் சாகவில்லை.

படித்துவிட்டு வேலை தேடி அலையும் பட்டதாரி இளைஞர்கள் இன்று மட்டுமல்ல, அன்றும் இருந்திருக்கிறார்கள் என்பது கூலிக்கு வந்தவன் மூலம் புலப்படுகிறது. சங்கிலித் தொடராகப் பிரச்சினைகளை மையப்படுத்தியமையால், இன்றும்கூட இந்த நாவல் வரவேற்பைப் பெற்றுள்ளது.

உயர் சாதி இளைஞன் பெருந்தகை படித்து விட்டு வேலையின்றி இருக்கிறான். உழைத்து வாழவேண்டும் எனும் பற்றுறுதியால், கீழ்சாதிக்காரரோடு சேர்ந்து வேலைககுச் செல்கிறான். சென்ற இடத்திலே பூங்கொடியைக் காண்கிறான். காதல் மலர்கிறது. பூங்கொடி உயர் அந்தஸ்துள்ள பெண் என்பதால், காதலுக்கு எதிர்ப்பும் எழுகிறது. அவர்கள் இருவரும் இணைவதற்கிடையில் நடக்கும் நிகழ்வுகள்தான் நாவலை நகர்த்திச் செல்லும் துடுப்புக்கள். இந்தக் காலத் திரைப்படக் கதைகளின் சாயலும் நாவலில் தென்படுவது போல்படுகிறது.

பண்டிதர் - நாவலாசிரியராக ஆகியிருப்பதால், இந்த நாவலில் தமிழ் வாழ்ந்திருக்கிறது. இலகு தமிழில் வெளிவரும் நாவல்களே இன்று அதிக வரவேற்பைப் பெறும் இடத்தில், போட்டி போடவேண்டிய நிலையிலுள்ளது "கூலிக்கு வந்தவன்" என்பதே எமது கருத்து.

அதேவேளை, நூலுக்கு மூதறிஞர் சிவராமலிங்கம் வழங்கியுள்ள முன்னுரையில் "கூலிக்கு வந்தவன்" வாசிக்கப்பட வேண்டிய புதினமன்று. படித்துச் சுவைத்து இரைமீட்க வேண்டியதொன்று என்பது உறுதி எனக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.


முப்பத்திரண்டு அத்தியாயங்களைக் கொண்டுள்ள இந்த நாவல் - சமுதாய சீர்த்திருத்தத்தையே தனது இதயமாகக் கொண்டுள்ளது. இதனை நூலாசிரியர் ஓரிடத்திலே "சமூக முன்னேற்றத்துக்குக் குந்தகமான குறைபாடுகள் களையப்பட வேண்டும். ஈழத்து இளம் நெஞ்சங்கள் - இன்று துடுப்பாட்டச் செய்திகள், தொலைக்காட்சி பெட்டிகள், உந்துருளி சாவிகள் என்பவற்றுக்கு அடிமையாகியுள்ள நிலையில், அந்த நெஞ்சங்களையும், இங்கு போரினால் அழிக்கப்பட்டுள்ள இல்க்கிய இரசனையையும் மீட்டுக்காக்கும் பணியில் இந்த நாவலும் பங்களிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலங்களை இழந்துவிட்டேன். எழுதவேண்டிய நிறைய விடயங்களைத் தவறவிட்டுவிட்டேன் என ஆதங்கப்படும் கவிஞர் ச.வேயை, இனி கவிஞர் என ஒதுக்கியுள்ள இடத்தோடு நாவலாசிரியர் எனும் இடத்தையும் ஒதுக்கி வரவேற்போம். அதற்குக் "கூலிக்கு வந்தவன்" வழிசமைத்துள்ளது என்றால் மறுப்பதற்கில்லை.

**இ.சர்வேஸ்.**

# கிழக்கும் மேற்கும்

## அருணி-கான்சு



"இச்சிறு துவாரம் சிலமணி நேரத்தில்
உடைந்தும் கரைந்தும் பெரிய தொன்றாகலாம்!
அதன் வழி கடல் நீர் நாட்டினுட் புகுந்தே
அனைத்தையும் அழிக்கலாம்" என்றவன் சிந்தையில்
கற்பனை விரிந்தே அச்சத்தைத் தந்தது!
கல்லால் துவாரத்தை அடைத்திட எண்ணி
அயலெங்கும் தேடினான்! அகப்படவில்லை!!
எவரை யென்றாலும் உதவிக்கு அழைத்திட
அபயக் குரலில் அழைத்துப் பார்த்தான்!


எவரின் காதிலும் அவன் குரல் விழவில்லை!
எவரும் அவன்பக்கம் திரும்பவும் இல்லை!!
கான்சுவோ தனிமையில்! வீதியோ இருளினில் !!
கடல்மதில் அருகினில் அமர்ந்து கொண்டான்!
கைகள் கொண்டத் துவாரத்தை அடைந்தான்!
தண்ணீர்க் கசிவும் தடைப்பட்டு நின்றது!
"யாரேனும் வந்ததும் அவரை அனுப்பி
ஊராரை எழுப்பி உதவிகள் பெற்றுத்
துவாரம் அடைப்பேன்; இதுவே அதுவரை
செய்யத் தக்கது" என்று தனக்குள்ளே
சொல்லிக் கொண்டுதன் கடமையில் ஆழ்ந்தான்!
கான்சுவின் குடலுள் பசித்தீ கனன்றது!
கான்சுவின் உடம்போ களைப்பில் தளர்ந்தது!
ஆயினும் கான்சு துணிவும் வீரமும்
தியாக சிந்தையும் நிறைந்தவன் என்பதால்
"தன்னுளம் தளர்ந்தால் தன் நாடு அழியும்...."
என்பதை நன்கவன் அறிந்ததால் தொடர்ந்தான்!
அந்தவேளையில் அவனது வீட்டினில்..........
கான்சுவின் தாயார் உள்ளம் கலங்கி
"கான்சு எங்கே? அவனிந்த மாதிரி
வீடு திரும்பிடப் பிந்துவ தில்லையே -
எங்கள் பிள்ளை" என்று கலங்கினாள்!
கான்சுவின் நண்பனாம் வில்லியம் வீட்டிற்குக்
கான்சுவின் தந்தையார் விரைந்து சென்றார்!
"இன்றவன் என்னுடன் வரவே இல்லை...!
என்று வில்லியம் பதில்தரக் கேட்டுடன்
வீட்டுக்கு விரைந்து விளக்கொன்றை எடுத்தார்!!

(தொடரும்)

**முருகு**

# கவிதைச் சோலை


## என்னைப் போக விடுங்கள்



உப்புக் காற்று உரசிட
ஒரு குடையின் கீழ்
மானம் பறிபோகும் உல்லாசமும்...
சோதனைகளை முடித்தும் - 'உங்கள்'
கண்களில் சந்தேகம் தீராமல்
தரிசித்த தலதாவின் புத்தரும்...
எங்கள் நிலங்களிலே
'எமன்களைப்' புதைத்துவிட்டு
'உங்கள்' மண்ணின் பெருமை பேசிய
தம்புள்ளை மரக்கறிகளும்...
யார் வாய்பிளந்து பார்த்தது வானூர்திகளை!
எப்படிப் புகுந்தார்கள் வென்றார்கள் - நேரில்
திகைத்துப் போன கட்டுநாயக்கவும்...
காட்டுக் கத்தல்களால் காதடைத்து
பிரச்சினைகளைத் தீர்ப்பவர்கள் இவர்களா
மனம் நொந்து வெளியேறிய பாராளுமன்றமும்...
தென்மராட்சியில் சிதிலமாய் நிற்கும் தென்னைகள்
'நீங்கள்' தறித்து வீழ்த்திய பனைகள்
கிளறியெறிந்த சித்தப்பா பூங்கா
நொறுக்கித் தள்ளிய கிட்டு பூங்கா
எல்லாம் மறந்து ரசிக்க முடியாமல் போன
கொழும்பின் நகரசபைப் பூங்காவும்...
'உங்களை' விடவும் நாட்டில்
மிருகங்கள் இருப்பதாய் காட்டிய
தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையும்...
கடுகதி ரயில்கள்
குளிரூட்டிய பேரூந்துகள்
வானளாவிய மாடிகள்
எதுவும் நான் கேட்கவில்லை
எதையும் எனக்குப் பிடிக்கவுமில்லை
எனக்கு எங்கள்
வீட்டைப் பார்க்க வேண்டும்
நான் கல்வி கற்ற - 'நீங்கள்'
குண்டு போட்டு என் தங்கையைச் சாகடித்த
அந்த பாடசாலையை பார்க்க வேண்டும்
என்னை எனது
ஊருக்குப் போக விடுங்கள்
'நீங்கள்' இல்லாத - எனது
ஊருக்குப் போக விடுங்கள்!

**சி.ந.ராஜ்குமார்**

## ஒரு அகதியின் அவலம்



மனசில் பாரச்சிலுவைகளை சுமந்தபடி
எல்லோரும் நடக்கிறார்கள்...

பாதங்கள் வலிகொள்வதாக
பாதங்களே சொல்கின்றன
கல்லுகளையும், முள்ளுகளையும்
மேடுபள்ளங்களையும்
தாண்டி விரைகின்றோம்.
விஷ ஜந்துகள் இடையில் வந்தால்
விலத்திப் போகிறோம்.

எம்மையறியாமலே கால்களுக்கு
இடையிடையே,
வேகங்கள் பூட்டப்படுகின்றன.
இன்னும் நடப்பதற்கு
பாக்கி அதிகம் இருக்கிறது.

தாகம் நாக்கைச் சுடுகிறது, மேகம் எங்களை
வெறித்துப் பார்க்கிறது.
காற்று
கணத்துக்குக் கணம் - எங்கள்
மூச்சை வாங்குகிறது.

இருந்தாலும்
நடக்கிறோம், தொலை தூரத்தை
தொலைத்துவிட்டால்போல...

கிளிகளின் கலகலப்பு
குயில்களின் கும்மாளப் பாட்டு
காக்கைகளின் ஒற்றுமை கீதங்கள்
எவற்றையுமே கேட்க முடியவில்லை
நாங்கள் ஊரிழந்து போவதால்
எல்லாமே பூமிக்கடியிற்தான்
வாசிக்கப் படுகின்றனவோ?

**முருகையா சுதேசிகன்**

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
சிறுகாப்பின் பேரிடத்தது ஆகி உறுபகை
ஊக்கம் அளிப்பது அரண்
-திருக்குறள்.

## நமது நோக்கு

### அச்சுறுத்தலுக்குள்ளாகும் அரசும் அவநம்பிக்கைக்குள்ளாகும் அமைதியும்

சிறிலங்காவின் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கான - எதிர்க் கட்சியினரின் அச்சுறுத்தலானது மெல்லமெல்லத் தீவிரம் கொள்ளத் தொடங்கியுள்ளது.

பாராளுமன்றத்தில் வலுவற்ற அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிய ஐ.தே. முன்னணியானது - போர்நிறுத்தம் மற்றும் நிரந்தர அமைதிக்கான சர்வதேச அனுசரணையுடன் கூடிய பேச்சுவார்த்தை என்ற வாக்குறுதிகளை முன்வைத்தே மக்களின் வலுவான ஆதரவைப்பெற முயற்சித்தது.

பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக்காலத்துப் போரின் விபரிக்க முடியாதளவு தாக்கங்களால் நிலைகுலைந்துபோன நாட்டின் பொருளாதாரத்தையும், சலிப்படைந்துபோன தென பகுதி மக்களின் நம்பிக்கையையும் ஏதோவொருவகையில் சமாதானம் என்ற மந்திரவார்த்தையைப் பயன்படுத்தி மீட்டெடுக்கும் மூலோபாயத்தை ரணில் அரசு தொலைநோக்குத் திட்டத்துடன் கையாண்டபோது, அது பொ.ஐ.முன்னணிக்கு உடனடியாக சமாளிக்கமுடியாத சவாலாகவே இருந்தது.

விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளுக்கு வழங்க முன்வந்த சந்தர்ப்பம் - ரணிலுக்கு சாதகமாக அமைந்ததுடன், சமாதானம் குறித்த முன்னெடுப்புகளுக்கு அமெரிக்கா உட்பட மேற்குலக சமூகம் வழங்கிய ஆதரவும், எதிர்க்கட்சிகளை வாயடைக்கவும் வைத்தது.

சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பத்தில் இருந்த சுறுசுறுப்பும், வேகமும் - பிரச்சினை தொடர்பான, பிரச்சினைகள் குறித்த முக்கிய விவகாரங்கள், சர்ச்சைக்குரிய விடயங்கள் பேச்சுவார்த்தை மேசையில் முன்வைக்கப்பட்ட வேளையில் தளர்ச்சிகாணத் தொடங்கியது.

அரசு - சமாதான நகர்வுகளை வெறுமனே காலங்கடத்தும் ஒரு தந்திரோபாயமாகக் கருதிச் செயற்பட முனைந்தது. நிரந்தர சமாதானத்திற்கான உறுதியான செயற்பாடுகளை விரைந்து நடைமுறைப்படுத்துவதில் பின்னடித்து, தனது பேரினவாத சுயரூபத்தை மெல்ல மெல்ல வெளிப்படுத்தத் தொடங்கியதும் சமாதான நகர்வுகளில் முடக்கம் ஏற்பட்டது.

எனினும் கூட, சர்வதேச சமூகத்தின் சமாதானம் மீதான அக்கறைக்கு விடுதலைப் புலிகள் கொடுத்த மதிப்பும், ஒத்துழைப்பும் - அமைதி முயற்சியை இழுபறி நிலையிலும் தொடர வைத்தன.

சர்வதேசம் விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான தொடர்புகளை மேற்கொள்ளத் தொடங்கியதும் - இனப் பிரச்சினையின் மூலமும், ஆழமும் அவர்களுக்கு விலாவாரியாக விளங்கத்தொடங்கியதும் - சிங்கள இனவாதிகள் அச்சமடையத் தொடங்கியதுடன், சமாதான நகர்வுகளுக்கு எதிரான பிரசாரங்களைத் தீவிரப்படுத்தும் முனைப்புடன்- தமது வழமையான பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள் போன்ற அனைத்து யுக்திகளையும் மேற்கொள்ளத் தொடங்கியதும், அவற்றிற்கு இனவாத இடதுசாரிகளும், மதவாத பௌத்த பீடங்களும் ஆதரவளிக்க ஆரம்பித்ததும் - ரணில் அரசுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கத் தொடங்கியதுடன், இடைக்கால நிர்வாகம் தொடர்பான கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைத்ததும்- இனவாதம் மீண்டும் தென்பகுதியை ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

சமாதான நகர்வுகள் - நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்திவிடும் என்ற சந்திரிகாவின் பிதற்றல் இதன் உச்சக்கட்ட பிரசாரமாகியது.

எந்தவகையிலும் துணிச்சலான முடிவெடுக்கும் திராணியை இனப்பிரச்சினை விவகாரத்தில் இழந்த ஒருவராகவே ரணில் செயற்படத்தொடங்கினார். சமாதான நகர்வுகளுக்கு இனிவரும் காலம் இடர்நிறைந்த காலம் என்றார். சமாதானப் பேச்சுக்கள் முறிந்தால் யுத்தத்திற்குத் தயார் என்றார். இது இவரின் இரண்டும்கெட்டான் நிலையையும், பலவீனத்தையும் வெளிப்படுத்தியது.

அமெரிக்கா, இந்தியா என அவர் பறந்து பறந்து பேசியதெல்லாம் சமாதான முயற்சிக்கான ஆதரவு பற்றி என்பதை விடவும் - சிறிலங்காவினதும், தனது ஆட்சியினதும் பாதுகாப்புப் பற்றி என்பதே சரியானதாகும்.

ரணிலுக்கான - அவரது ஆட்சிக்கான சர்வதேச பக்கபலம் சந்திரிகாவால் சாதிக்கமுடியாத ஒன்றாகும்.

குறிப்பாக இந்தியாவுடனான ரணிலின் நெருக்கம் சந்திரிகாவின் எதிர்கால அரசியலுக்கான ஓர் அச்சுறுத்தலாகவே அவர் எண்ணுகிறார்.

இப்போது ஆட்சியைக் கலைக்கும் அல்லது மாற்றும் விடயத்தில் அவருக்குத் தென்னிலங்கையின் பிரதான எதிரக கட்சிகள் அளிக்கும் ஆதரவு, பலத்தை முழுமையாக நம்பும் சந்திரிகா, தனது நிறைவேற்று அதிகார வலுவை பயன்படுத்த காலம் பார்த்திருக்கிறார் என்றே கூறவேண்டும்.

தீபாவளி அன்று அவரது கட்சியினர் - அவரின் பிரசன்னம் இன்றியே நடத்திய சமாதான எதிர்ப்பு ஊர்வலம் பிசுபிசுத்துப்போன நிலையில் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சியைக் கலைத்து, தேர்தலை நடத்தத் துணிவாரா என்பது கேள்விக்குறியே...

ஆட்சியை வேறு குறுக்கு வழிகளில் மாற்ற முயலலாம். அதற்கும் அவரது அதிகாரத்தையே பயன்படுத்தலாம்.

எதுவானாலும் சிறிலங்காவின் அரசியலின் ஸ்திரத்தன்மை என்பது பலவீனமாகவே இருக்கையில், எந்தத் தீர்வையும்- எந்த அரசும் முன்வைக்காதென்பதே யதார்த்தமாகவுள்ளது.

இந்த நிலையில் சமாதானம் பற்றிய சர்வதேச எதிர்பார்ப்பு கேள்விக்குறியே..! •

## நாடும் நடப்பும்




சமாதானம் முறிந்தால் எந்த நிலைமையையும் எதிர்கொள்ள அரசு தயாராகவே உள்ளது.
- ரணில்-

# கடற்படையின் ஆறு அதிகாரிகள் கொமடோர்களாகப் பதவியுயர்வு

(கொழும்பு)

ஆறு கடற்படை அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல், கொமடோர் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக, கடற்படைத் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படையின் நடவடிக்கை இயக்குநரும், கடற்படைப் பேச்சாளருமான ஜெயந்த பெரேரா, திருகோணமலைக் கடற்படைப்பயிற்சிக் கல்லூரிக் கட்டளைத் அதிகாரியான துஷித வீரசேகர, பூஸா பகுதிக்கான கட்டளை அதிகாரி ஜெயந்த கொலம்பகே, புனாவையிலுள்ள கடற்படைப் பயிற்சி நிலையத் தளபதியும், பிரதேச கட்டளை அதிகாரியுமான கீத்சிறி வீரக்கோன், திருகோணமலையிலுள்ள எஸ்.எல்.என.எஸ் திஸ்ஸ, கடற்படைத்தளத்தின் கட்டளை அதிகாரி நவன் தென்னக்கோன் மற்றும் எஸ்.எல்என்.எஸ்.சயூரா, பீரங்கிப்படகின் கட்டளை அதிகாரி ருவான்டயஸ் ஆகிய ஆறு அதிகாரிகளுமே, கொமடோராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கப்டன் தரத்தில் இருந்த இவர்கள், கடந்த வெள்ளிக்கிழமை முதல் கொமடோரார்களாக பதவி உயர்த்தப்பட்டனர்.

இவர்களில் சயூரா பீரங்கிப்படகுக் கட்டளை அதிகாரியான கொமடோர் ருவான்டயஸ் - முல்லைத்தீவுக் கடலில் புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றிவந்திருந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட கப்பலை, கடந்த ஏப்ரல் மாதம் தாக்கி மூழ்கடிப்பதற்கான கட்டளையை வழங்கியவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க எதிர்ப்புப் பேரணியில் கதிர்காமரின் பாதுகாப்பு அதிகரிப்பு

கடந்த தீபாவளித் தினத்தன்று - பொதுஜன முன்னணி நடத்திய ஊர்வலத்தின் முடிவில், நகரசபை மண்டபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றச் சென்ற முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கான பாதுகாப்பு, என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்பட்டது.

முக்கிய வி.ஐ.பிக்களுக்குக் கொடுக்கும் பாதுகாப்பைப் போலவே, கதிர்காமருக்கான பாதுகாப்பும் கொடுக்கப்பட்டது. அவரது பாதுகாப்பு தொடர்பாகப் படையினரால் உத்தரவாதமும் அளிக்கப்பட்டது.

எந்த ஒரு சினைப்பர் தாக்குதலும் நடக்கமுடியாத அளவிற்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததெனக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

கதிர்காமருக்கு- விடுதலைப் புலிகளால் நிறையவே ஆபத்து உள்ளது. இதனால், இவர் முன்னர் வெளியுறவு அமைச்சராக இருந்தபோது அலுவலகத்திற்குள்ளேயும், வெளியேயும் இவருக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இவர் நகரசபை மைதானத்துக்கு வந்தமை- ஜனாதிபதி வரமுடியாமல் இருந்தமையை ஈடுசெய்வதாக இருந்தது.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர்களின் கருத்தில், அரசுக்கெதிரான எதிர்ப்பு பேரணியில் ஜனாதிபதி கலந்துகொள்ளாதது, அரசை வீழ்த்துவதற்கான பலமான கூட்டணி ஒன்றை ஏற்படுத்த முடியாமல் போய்விட்டதெனத் தெரிவித்தனர்.

# பொலிஸ் அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க மூன்று நாடுகளின் நிபுணர்கள் வருகை!

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்குத் தகவல் பரிமாற்றம், குற்றமிழைப்போரைக் கைதுசெய்தல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு, பயிற்சி அளிப்பதற்கு அமெரிக்கா, பிரிட்டன், சுவீடன் ஆகிய நாடுகள் உதவமுன்வந்துள்ளன.

இது சம்பந்தமாக, வெளிநாட்டு அதிகாரிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும், இவர்கள் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குப் பயிற்சி வழங்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் - பொதுமக்களின் உறவுகள் பற்றி இவர்கள் தங்கள் பயிற்சியின்போது எடுத்துக்கூறவுள்ளனர். மற்றும் குற்றமிழைப்போரைக் கைதுசெய்வது சம்பந்தமாகவும் இவர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

### கொழும்புத்துறைமுகத்தை

# வெளிநாட்டு நிறுவனங்களிடம் கையளிக்க அரசு தீர்மானம்!

கொழும்புத் துறைமுகத்தை மூன்று வெளிநாட்டு வர்த்தக கம்பனிகளிடம் ஒப்படைக்க, அரசு தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெஸ்ற் போட் கம்பனிக்கும், மலேசிய கம்பனி ஒன்றிற்கும், பிறிதொரு கம்பனிக்குமே துறைமுகம் ஒப்படைக்கப்படவுள்ளது.

விடுதலைப்புலிகளால் இந்தத் துறைமுகத்திற்கு ஏற்படும் பாதிப்பினைத் தவிர்க்கும் முகமாகவே, இந்த முடிவினை அரசாங்கம் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்தின் முழு அதிகாரத்தையும், கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் வெஸ்ற் பேட் கம்பனிக்கு வழங்கப்படவுள்ளது. எனினும், வெஸ்பேட் கம்பனியும்- விடுதலைப்புலிகளுடன் தொடர்புபட்ட கம்பனி என இராணுவப் புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஜே.வி.பியினரின் செயற்பாடுகள் திருகோணமலையில் அதிகரிப்பு!

திருகோணமலை கந்தளாயிலுள்ள கோட்டங்காடு சந்தியில், நேற்று ஜே.வி.பியினரின் பொதுக்கூட்டமொன்று இடம்பெற்றது.

நேற்றுமாலை 3.20 மணியிலிருந்து 5.50 மணிவரை நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், சுமார் 50 பேர்வரை கலந்துகொண்டனர்.

இதில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிகால் கலப்பதி கலந்துகொண்டு உரையாற்றினார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்- புலிகளுக்கும், அரசிற்குமிடையிலான ஒப்பந்தம் இந்த நாட்டிற்குத் தேவையற்ற ஒன்று. அதனைக் கிழித்தெறியவேண்டும். நாட்டில் வேலைவாய்ப்பு தற்போது இல்லை. அரசு - இளைஞர், யுவதிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

தற்போது நாட்டிலுள்ள சொத்துக்கள் யாவும் தேவையற்ற விதத்தில் அரசு- தனியாருக்கும், வெளியாருக்கும் விற்கின்றது. மக்கள் பொருட்களை வாங்கமுடியாத அளவிற்கு, அரசு நாளுக்கு நாள் விலைகளைக் கூட்டிச்செல்கின்றது என அரசு மீது குற்றம் சுமத்தினார்.

அத்துடன், நெல்லுக்கான உத்தரவாத விலை அதிகரிக்கப்பட வேண்டுமெனவும், தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தினைத் தொடர்ந்து, கந்தளாய் சீனி ஆலை, கந்தளாவ, வான்எல ஆகிய இடங்களிலும் இந்தக் கூட்டங்கள் நடைபெற்றன. (04)

# நாடும் விளைந்து நந்தாவிலும் விளையுமா?

"நாடு விளைந்தால் நந்தாவில் விளையாது.

நந்தாவில் விளைந்தால் நாடு விளையாது" என்பார்கள்.



அத்தகைய நந்தாவிலின் பெருமை இன்னும் கொஞ்சக் காலங்களில் வெள்ளத்தில் மூழ்கிவிடும் நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. கோண்டாவில் தென்மேற்கு கிராம அலுவலர் பிரிவில் இருக்கும் நந்தாவில் பகுதி - இரண்டு சிறிய குளங்களைக் கொண்ட விவசாய பூமியாகக் காணபபடுகின்றது. நெல்லிற்குப் பொருத்தமான மண்வளத்தைக் கொண்ட இந்த நிலத்தில், பல தடவைகளுக்கு ஒருமுறைதான் விதைத்த நெல்லைத் திருப்பிப் பெறக்கூடியநிலை, அப்பகுதி விவசாயிகளுக்கு உள்ளது. காரணம் - வருடாவருடம் பெய்யும் மழை நீரால் இரண்டு சிறிய குளங்களும் நிரம்பி, மீதி நீா வயல் நிலங்களிலும், குடிமனைகளிலும் தேங்குகின்றது. இதனால், ஆயிரக்கணக்கான ரூபாய்களை விவசாயிகள் வருடாவருடம் இழக்க நேரிடுகின்றது. அப்பகுதியில் வாழும் குடும்பங்களும இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படு கிறார்கள். இப்பகுதியில் வசிக்கும் மக்களே விவசாயத்தில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் விவசாயத்துக்குச் செலவுசெய்த பணமும் விரயமாவதோடு, இடம் பெயரவும் நேரிடுகிறது.

ஆரம்பகாலத்தில் இப்பகுதியில் தேங்கும் நீர் வாய்க்கால்மூலம் கடலுக்குக் கடத்தப்பட்டு வந்துள்ளது. பின்னர், அந்த வாய்க்கால் தூர்ந்து போனநிலையில், வெள்ளம் வயல் நிலங்களிலும், குடிமனைகளிலும் தேங்கி, பெரும் இன்னல்களை உருவாக்கி வருகின்றது.

கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு மேலாக இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும், சில சமயங்களில் வருடாவருடமும் அப்பகுதி மக்கள் வெள்ளத்தால் இடம் பெயர்ந்து செல்லவேண்டி ஏற்படுகின்றது.

தூர்ந்துபோன வாய்க்காலினைச் செப்பனிட்டு, குளத்தில் தேங்கும் நீரைவிட, மீதி நீரை கடலுக்குக் கடத்துவதற்கான முயற்சிகளில் இதுவரை சம்பந்தப்பட்ட எவரும் அக்கறை காட்டுவதாக இல்லை. இதனால், விவசாயம் செய்து - நல் விளைவைப் பெறக்கூடிய காலமாகிய நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் விவசாய நிலங்களில் நீர்தேங்கி, குடிமனைகளையும் ஆக்கிரமிப்பதால் - மக்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மாரிகாலம் வந்துவிட்டால், வயலை உழுவதா? நெல் விதைப்பதா? பயிர்க் கொடி நாட்டுவதா? எனச் சில விவசாயிகள் கேள்வியுடன் இருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இதைவிட, மக்கள் - வெள்ளம் வருகிறதோ இல்லையோ, இம்முறை எங்குபோவது என கலங்கிக் கொண்டு இருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது.


மேலும் இப்பகுதிக்குச் செல்லும் வீதி - குன்றும், குழியுமாக அரைவாசி திருத்தியும், மீதி திருத்தப்படாத நிலையில் காணப்படுவதால், போக்குவரத்துக்கு மக்கள் பெரும் சிரமப்படுகின்றார்கள். இந்தச் சிறு வீதியால் மழைநீா ஓடிவந்து குளத்துக்குச் செல்வதால், வீதி அரிக்கப்பட்டு மணல் முழுவதும் குளத்துக்கு இழுத்துச் செல்லப்படுகின்றது. இதனால், குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதியால் - அவசர தேவைக்குக்கூட (மருத்துவதேவை) முச்சக்கர வண்டியிலும்கூடச் செல்வதற்கு முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இத்துடன், பாதை சீரின்மையால் அதிகளவில் மக்கள் போக்குவரத்து செய்யாவிடத்து, திருடர்களும் அவ்வப்போது தங்கள் கைவரிசையைக் காட்டத் தவறுவதில்லை. அத்தோடு, வேறு இடங்களிலிருந்து பலதரப்பட்ட குப்பை கூழங்களையும், இறந்த விலங்குகளின் உடல்களையும் சிலர் அந்த வீதியில் போட்டுவிடுவதால், துர்நாற்றம் வீசி, சுகாதாரச் சீர்கேட்டையும் உண்டுபண்ணுகின்றது.

வருடாவருடம் மக்கள் இடம் பெயர்ந்து சென்றாலும், அவர்களுக்கான நிவாரணப் பொருள்களோ, அன்றி வேறெந்த உதவிகளோ இதுவரையும் வழங்கப்படுவதில்லையெனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் வருடாவருடம் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து செல்வதும், பொருட்கள், பயிர்கள், விவசாய நிலங்கள் எல்லாம் இழக்கப்படுவதும் - திரும்பிவந்து வீடுகளைத் திருத்தி வாழ்வதும், மீண்டும் வெள்ளம் வரும்போது இடம்பெயர்ந்து செல்வதும் வழமையான நிகழ்வாகிவிட்டது எனக்கூறி, அப்பகுதி மக்கள் சலித்துக்கொள்கின்றனர்.



சென்றவருடமும் இடம்பெயர்ந்து சென்று, பல இன்னல்களை அனுபவித்ததாக அப்பகுதி மக்கள் கூறு



கின்றனர்.

எனவே, இப்பகுதிக்குச் செல்லும் சிறுவீதியினைச் செப்பனிடுவதோடு, குளத்தில் தேங்கும் நீரைவிட, மீதிநீரை - தூர்ந்த நிலையில் காணப்படும் வாய்க்காலைச செப்பனிட்டு, கடலுக்குக் கடத்தி விடுவதாலும், அப்பகுதி மக்கள் தற்போது எதிர்நோக்கும் பல பிரச்சினைகளில் இருந்து மீள்வதோடு, முழுமையான நிலத்திலும் பயிர்செய்து - பொருளாதாரக் கஷ்டத்திலிருந்து மீளவும் வழி ஏற்படும். அத்தோடு, வருடாவருடம் இடம்பெயர்ந்து செல்லாமல், நிரந்தரமான ஒரு வாழ்விடத்தையும் அமைத்துக்கொள்ளமுடியும். இதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் தமது பார்வையினை நந்தாவில் பக்கம் திருப்புவார்களா? எனத் தற்போது பருவமழை அண்மித்த காலத்தில் மக்கள் எதிர்பார்த்தவண்ணம் காத்திருக்கின்றனர்.

- இரா. காயத்திரி

# அழிந்து செல்லும் மொழிகளைப் பாதுகாக்கலாமா?

உலகில் இன்று 6000 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றில், பாதிக்கு மேற்பட்ட மொழிகள் அழியும் நிலையில் உள்ளன. ஒவ்வொரு வருடமும் 10 மொழிகள் மறைந்து விடுகின்றன. 3000 இற்கு மேற்பட்ட மொழிகள் - ஒவ்வொன்றும் 10,000 திற்கும் குறைந்த மக்களாலேயே பேசப்படுகின்றன. 10,000 இற்கும் குறைந்த மக்களால் பேசப்பட்டுவரும் மொழிகள் - காலப்போக்கில் அழிந்து, மறைந்துவிட வாய்ப்புக்களுண்டு. மொழிகள் இப்படி விரைவாக ஏன் மறைந்து விடுகின்றன என்பதற்குப பல காரணங்கள் உணடு. ஆரம்ப வரலாற்றைப் புரட்டிப் பார்ப்பின், குடியேற்றவாத நாடுகளின் மொழிதிணிப்பின் காரணமாக, 15 வீதமான மொழிகள் மறைந்துவிட்டன. மேலும், 19 ஆம் நூற்றாண்டில் குடியேற்ற நாடுகளின் எழுச்சி, எல்லைகளில் ஒற்றுமையைப்பேணல் போன்ற நிலைப்பாட்டினால், மொழிகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அணமைக்கால உலகமயமாதல், உலக நிதிச்சந்தை வளர்ச்சி, மின்தொலைத்தொடர்பு வழிமுறைகள் காரணமாக, மேலும் பல விரைவான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆங்கிலம் உலகின் 20 வீதமான மக்ளாலேயே பேசப்பட்டு வந்தபோதிலும், 68 வீதமான மின்வலைப் பின்னல் தொடர்புகள் ஆங்கிலத்திலேயே உள்ளன. அழிந்து செல்லும் மொழிகளைப் பாதுகாக்க ஏதாவது செய்யாவிட்டால், இன்று பேசப்பட்டுவரும் மொழிகளில் பல அழிந்து போவது நிச்சயம்.

தொடர்பு ஊடகங்களின் அதிவேக வளர்ச்சியின் காரணமாக, ஆங்கில மொழியைக் கற்கும் ஆர்வம் வளர்ந்துள்ள அதேவேளை- தாய்மொழிகளையும் காப்பாற்ற வேண்டிய தேவையும் இன்று ஏற்பட்டுள்ளது. தமது தாய்மொழியில் கல்வி கற்கும்போது, மாணவர்கள் தமது திறமைகளை நன்கு புலப்படுத்துவதாகப் பல ஆய்வுகள் தெரியப்படுத்தியுள்ளன. உலகில் கல்வியறிவு அற்றவர் எனக் கணிப்பீடு செய்யப்பட்ட 476 மில்லியன் மக்கள் தொகையினரும் - தமது தாய் மொழியைப் பேசுபவர்களாகவும், இவர்கள் வாழும் நாடுகளில் அவர்கள் தாய்மொழியில் கல்வி போதிக்கப்படுவதில்லை என்பதும் தெரியவந்துள்ளது. தாய்மொழியில் கல்வி கற்கும்போது, அது உணர்வுபூர்வமானதாகவும், பூரண தெளிவை ஊடடுவதாகவும் உள்ளது. அத்துடன், சிறுபான்மை இனத்தவர் தம் மொழியில் கல்வி ஊட்டப்படும்போது, தாம் மதிக்கப்படுவதாக உணர்கின்றனர். ஆயினும், தாய்மொழிக் கல்வி - அறிவுத்திறன் மேம்பாட்டை வளர்க்க உதவவில்லை. ஆதலால், அது பிரயோசனமற்ற மொழி என்ற எண்ணக்கருவும் இன்று வலுவடைந்து வருகின்றது.

மேலும், ஐரோப்பிய நாடுகளில், அரசியல் புகலிடம் தேடிச் செல்வோர் அதிகரித்துச் செல்வதனால், அவர்களது மொழிக் கொள்கைளிலும் மாற்றங்கள் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் - விக்ரோறியா மாநிலத்தில் - ஆரம்ப, இரண்டாம் கட்டப்பாடசாலைகளில், ஆங்கிலம் தவிர்ந்த வேறு ஏதாவது ஒரு மொழியைக் கட்டாயமாகக் கற்பித்தல் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. தாய்மொழிக் கல்வியுடன், பல்மொழிக் கல்வியின் தேவை பற்றிய சிந்தனை இன்று உலகில் ஏற்கப்பட்ட மாற்றமாக வளர்ந்து வருகின்றது. யுனெஸ்கோ- 1999 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதியைச் சர்வதேச தாய் மொழி தினமாகப் பிரகடனப்படுத்தியமை, இதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. இன்று மொழி ஓர் ஊடகமாக மட்டுமன்றி, ஓர் இனத்தின் தனித்துவத்தை வெளிக் காட்டும் சாதனமாகவும் உள்ளது. இருந்தபோதிலும், மொழியின் பயன்பாடு, தனித்துவம் எல்லாமே இன்று அரசியல்மயமாகிவிட்டது. இவ்விடயத்தில், சிறுபான்மை இனத்தவரே அதிகம் பாதிப்படைகின்றனர். இவர்கள் தமது மொழியைப் பயன்படுத்துவதில் எப்போதும் தடைகளை எதிர் நோக்குகின்றனர். 1958 இல் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள சட்டம் - தமிழ்மொழிக்கு ஏற்படுத்திய தாக்கத்தினைக் கூறலாம். மேலும், இந்தோனேசியாவில் ஜனாதிபதி சுகாட்டோவின் காலத்தில் - சீன சமூகத்தவர் சீனமொழி பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டிருந்தது.

தாய் மொழியை வளர்ப்பது என்பது, அரசியல்ரீதியில் நன்கு திட்டமிட்ட மொழிகளுக்கு முக்கியம் கொடுத்தன. ஆயினும், இன்று நடப்பது என்ன? தாய் மொழிக்கு முக்கியம் கொடுக்கின்றோம் என்பதற்காக, அரசாங்க மொழியாக அவற்றை ஆக்கியபோதிலும், பெரும்பாலான மக்கள் பிரெஞ், ஆங்கில மொழிகளையே பேசுகின்றனர், விரும்புகின்றனர். தாய்மொழியில் கற்றல் என்பது ஒருவரின் உரிமையாக இருக்க வேண்டும். அத்றகு மதிப்பளிக்க வேண்டும். அதன் வளர்ச்சிக்கான பல படிகளை அமைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில், மக்களைக் கவரும் தன்மையை அது இழந்து விடுவதோடு, ஏனைய பலமான மொழிகளின் மேலாதிக்கம் தவிர்க்க முடியாததாகிவிடும்.

சிவச்சந்திரன் பாரதி

# கண்காணிப்புக்குழு மீது நோர்வே அரசு நம்பிக்கை!

## நோர்வே போஸ்ட் தகவல்

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மீதும், அதன் உறுப்பினர்கள் மீதும் நோர்வே அரசாங்கம் முழுமையாக நம்பிக்கை வைத்திருப்பதாக, 'நோர்வே போஸ்ட்' என்ற சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது.

நோர்வேயிலிருந்து வெளிவருகின்ற இந்தச் சஞ்சிகை - கண்காணிப்புக்குழுவினரின் செயற்பாடுகள் தொடர்பாக, நோர்வேப் பிரதமர் பொண்டவிக் - ஜனாதிபதி சந்திரிகாவுடன் விரைவில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார் எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளில் தமக்கு திருப்தி அளிக்கவில்லை என்று கூறி, அவரைப் பதவிவிலகுமாறு கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளிகளுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வரும் முன்பள்ளிகளுக்கு, இடையிலான விளையாட்டுப் போட்டி - கடந்த வியாழக்கிழமை மருதங்கேணி கணேசானந்தன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ஜ.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இப் போட்டிகளில், தமிழீழத் தேசியக் கொடியினை வடமராட்சி கிழக்கு அரசியல் பொறுபபாளர் தீபன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொடியினை திட்டப் பணிப்பாளர் லோரன்ஸ் கிறிஸ்ரியும், வடமராட்சி கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கொடியினை, வடக்கு-கிழக்கு அபிவிருத்திப்புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் ச.திரவியராசாவும் ஏற்றினர்.

இப்போட்டியில் - தவமலர், அரி, முகுந்தன், விடுதலை, அன்பழகன் ஆகிய 5 முன்பள்ளிகளின் சிறுவர்கள் பங்குபற்றினர்.

இவ்விளையாட்டு நிகழ்வில், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் துரை.சத்தியசீலன், வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன், புனர்வாழ்வுக் கழக திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி ஆகியோர் சிறப்புரையாற்றினர். (122)

# அமெரிக்க உதவிப் பாதுகாப்பு அமைச்சர் தங்கியிருந்த விடுதியருகில் குண்டுத் தாக்குதல்

## அமைச்சர் மயிரிழையில் உயிர்தப்பினார்

பக்தாத்தில் அமெரிக்க உதவிப் பாதுகாப்பு அமைச்சர் போல் வோல் போவிற்ஸ் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அருகில் தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் அவர் மயிரிழையில் உயிர்தப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது, அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 15 பேர் காயமடைந்தனர்.


குண்டுவெடித்தபோது ஏற்பட்ட அதிர்வினால் பலர் தூக்கிவீசப்பட்டதாகவும், ஹோட்டலைச் சுற்றி ஓரே புகைமண்டலமாக இருந்ததாகவும், போல்வோல் போவிற்ஸ் பாதுகாப்பாக ஹோட்டலில் இருந்து வெளியேற்றபபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடைபெற்ற பின்னர் போல்வோல்போவிற்ஸ் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவிக்கையில், அமெரிக்கா ஈராக்கில் மேற்கொண்டு வரும் பணிகளை இவ்வாறான தாக்குதல்கள் மூலம் நிறுத்திவிட முடியாது எனத் தெரிவித்தார்.

அமெரிக்கா - ஈராக்கினைக் கைப்பற்றுவதற்காக மேற்கொண்ட போரில் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் போல் வோல்போவிற்ஸ் முக்கிய பங்குவகித்தமை குறிப்பிடத்தக்கது.

## எகிப்திய இரட்டைச் சிறுவர்கள்

# சத்திரசிகிச்சையின் பின்னர் நேருக்குநேர் பார்வை!



தலை ஒட்டிப் பிறந்த எகிப்தைச் சேர்ந்த முகமட், அகமட் ஆகிய இருவரும் முதல் முறையாக ஒருவரை ஒருவர் நேருக்கு நேராக பார்ப்பதற்காக, முகமட் தள்ளு வண்டி ஒன்றில் அகமட்டின் இருப்பிடத்துக்கு இருமுறை எடுத்துச் செல்லப்பட்டதாக, டல்லாஷ் மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பின்னர், இருவரையும் தமது அறைகளுக்கு மாற்றுவதற்கு வைத்தியர்கள் எத்தனித்தபோது அவர்கள் பலமாக அழுததாகவும், வைத்தியர்கள் தெரிவித்தனர்.

படுக்கைப் புண்கள் ஏற்படாதவாறு, உடலை எல்லா திசைகளுக்கும் திருப்புவதற்கு ஏற்றவாறு படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் நீண்டகாலமாக உடல் உறுப்புக்களை நன்றாக உபயோகப்படுத்தாமல் இருந்துள்ளனர். இதனால், இவர்களுக்கு தசைப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். மூளையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்வதற்கு பல வாரங்கள் ஆகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மொங்கோலிய நாட்டிலுள்ள

# நாடோடிகளின் வாழ்க்கைமுறை பாரம்பரியத்திலிருந்து மாற்றம்!

## அந்நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு



மொங்கோலியாவில் வாழும் நாடோடி மக்கள் தமது பாரம்பரிய வாழ்க்கைமுறையில் இருந்து மாறிவருவதாகவும், இன்னும் 10 தொடக்கம் 15 ஆண்டுகளில் அவர்களின் வாழ்க்கைமுறை முற்றாக மாறிவிடலாம் என, மொங்கோலியாவின் பிரதமர் நம்பரைன் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

வேகமாக மாறிவரும் உலகிற்கு ஏற்றவாறு இந்த மக்களும் தமது வாழ்க்கை முறையை மாற்றிவருவதாகவும் நம்பரைன் தெரிவித்தார்.

மொங்கோலியாவில் வாழும் 2.5 மில்லியன் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மந்தை வளர்ப்பதிலேயே தமது வாழ்க்கையை நடத்திவந்தனர்.

தற்போது இவர்கள் தமது பாரம்பரிய தொழில்களை விட்டு நகர்ப்புறங்களை நோக்கி நகர்வதாகவும், மாறிவரும் காலநிலையும் இதற்கான காரணமென தெரிவிக்கப்படுகிறது.

# பலஸ்தீன காஸாப் பகுதி வீடுகள் இஸ்ரேல் படைகளால் தகர்ப்பு!



கடந்த சனிக்கிழமை தற்காலிகமாக 2000 பலஸ்தீனியர்களை காஸாப் பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படையினர் அகற்றியதாகவும், அங்கு அமைக்கப்பட்டிருந்த கட்டடங்களை குண்டு வைத்து அழித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அல் - சகாராவில் பலஸ்தீனியர்களின் பொலிஸ் நிலையம் ஒன்று தாக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் நேற்று தீவிரவாதிகளை வெளியேற்றுவதற்காகவே, இந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும், பின்னர் குடிமக்கள் அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தாக்குதலில் போராளிகளால் வெளிப்புறத்தில் அமைக்கப்பட்ட வேலி ஒன்றினுடாக மறுபுறத்தில் சென்று, தாக்குதலை மேற்கொண்டதில் - மூன்று இஸ்ரேலியப் படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும், இருவர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


காஸாப் பகுதியில் ஏற்பட்டுள்ள பனிமூட்டத்தைப் பயன்படுத்தி, பலஸ்தீன போராளிகள் இஸ்ரேலியப் படைகளுக்கு எதிரான தாக்குதலை அதிகரித்துள்ளதாக, இஸ்ரேலியப் படைத்தளபதி டான்காரல் தெரிவித்தார்.


இதனால், சேதமாக்கப்பட்ட கட்டடங்களுக்குள் மறைந்திருந்தவாறு, இஸ்ரேலியப் படையினரின் நடமாட்டங்களை பலஸ்தீனப் போராளிகள் அவதானித்து வருவதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.


காஸாப் பகுதியில் பலஸ்தீனர்களின் பாதுகாப்பு காவல் கடமையில் ஈடுபட்டுவரும் அமைப்பொன்றினாலேயே, இந்தக் கட்டங்கள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

# இரண்டாவது சங்கம நிகழ்வின் சில பதிவுகள்...




















நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

யுத்தம் மீண்டும் தொடங்கினால் சர்வதேச பாதுகாப்பு வலையமைப்பின் மூலம் அதனை எதிர்கொள்வோம் என்று, ரணில் முன்னர் ஒரு தடவை கூறியிருந்தார்.

ஆனால், சமாதானத்திற்கு எதிரான சக்திகளின், அமைதி எதிர்ப்பு யுத்தத்தையும் - அதே சர்வதேச பாதுகாப்பு வலையமைப்பை பயன்படுத்தி எதிர்கொண்டால் என்ன? அதை அவர் செய்யமாட்டார். சமாதானத்திற்கு எதிரானவர்கள் அனைவரும் அவரது ஆட்கள், அவரது இனத்தவர், அவரது மதத்தவர் மட்டுமே. அவர்களை அவரால் எப்படி அழிக்க அல்லது அடக்க முடியும்? செய்யப்படும் ஒப்பந்தங்கள் யாவும் தமிழ்மக்களுக்கு எதிரானது என்பதே முக்கியமானது.

அந்த ஒப்பந்தங்கள் மூலம் அரசு எதை சாதிக்க நினைக்கிறது? அரசு திணிக்க நினைக்கும் தீர்வும் தமிழர்களின் அபிலாசைகளும் முரண்படும் போது, ஏற்படக்கூடிய நிலையை சமாதானத்திற்கு அப்பாற்பட்ட, அதற்கு எதிரான, அணுகுமுறை மூலம் எதிர்கொண்டு தமிழ்மக்களை ஒடுக்குவதற்கே நினைக்கிறது. சர்வதேச சமூகம் நியாயபூர்வமான தீர்வுக்கு ஆதரவு வழங்குமா? இனவாதிகளின் அபிலாசைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமா? சர்வதேச சமூகம் அவரவர் அரசியல் இராணுவ அபிலாஷைளுக்கு இணங்கும் தரப்புக்கே இசைந்து போவார்கள் என்பது நிச்சயம்.

'சந்தர்ப்பவாதிகளினதும், சுயநலமிகளினதும் பார்வையில் சமாதானம் என்பது நீதியான, நியாயமான பக்கம் இருக்கும் என்று நம்புவது அறிவீனம்' - என்கிறார் ஒரு வரலாற்று ஆசிரியர்.

-தெருவாசி

# தமிழ், முஸ்லிம் இனங்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் சக்திகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்!

## தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பில் இணக்கம்

கிண்ணியா பிரதேசத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் பிரச்சினைகளை உருவாக்கும் சக்திகளை இனங்கண்டு, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதனடிப்படையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பொலிஸாரும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளும் இணைந்து நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

நேற்று கிண்ணியா பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையே இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக நடைபெற்ற தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பின் போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. திருகோணமலை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் அவர்களது அலுவலகத்தில் காலை 11 மணியளவில் திருகோணமலை மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிபபுக்குழுத் தலைவர் அவ்ரல் குறுக்காஸ் தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தருமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் மக்கள் சார்பில் ஜமாஐத்துல் உலமா சபையின் செயலாளர் கதியத்துல்லா தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் திருகோணமலைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி எபக்கே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது, குரங்குபாஞ்சான் பகுதியிலுள்ள முஸ்லிம்களின் வயல்களுக்குச் செல்ல எவ்வித தடையுமில்லை எனவும், இதில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் அது தொடர்பாக தமக்கு தெரியப்படுத்துமாறும் விடுதலைப் புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி மீண்டும் சந்தித்துக் கலந்துரையாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. (10,04)

## தேசிய எழுச்சிப்பேரவையின்...

அருட்திரு ஜெயக்குமார் அடிகளார், புதிய பள்ளிவாசல் மௌலவி ஈர்வான், கணபதீஸ்வரக்குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சிதம்பரநாதன், துணைவேந்தர் மோகனதாஸ், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பலர் உரையாற்றினர்.

இந்நிகழ்வில் வலிகாமம், தீவகம், வடமராடசி, தென்மராட்சி, யாழ். நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைகளைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டார்கள். கோட்டரீதியாக எதிர்நோக்கப்படும் பல பிரச்சனைகளும், தீர்மானங்களும் முன்மொழிவுகளாக இங்கு கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### மாத்தறையில் இருவர் சுட்டுக்கொலை

முச்சக்கர வண்டியில் பிரயாணம் செய்த இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் மாத்தறையில் உள்ள பஸ்கொட என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

பழைய பகையே, இந்த இரட்டைக் கொலைக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இரண்டு பேரும் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் முச்சக்கரவண்டியும் தீயிட்டுக்கொழுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது,




### புனித யூதாததேயூ திருவிழா

அரியாலை புனித யூதாதேயு ஆலயத்திருவிழா நாளை நடைபெறவுள்ளது. இன்று மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் திருப்பலிப்பூசையும், நாளை காலை 7.30 மணிக்கு திருவிழா கூட்டுத்திருப்பலியும் திருச்சொரூப ஆசீரும் நடைபெறும்.

### படையினரின்...

தாம் அச்சம் கொண்டிருப்பதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டதையடுத்தே, அவர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.(202)

### கூட்டணியின்.....

டான நிலைக்கு இட்டுச்சென்றுள்ளார். இதன்காரணமாக அவர் தானாகவே முன்வந்து கட்சியின் தலைமைப் பதவியினைத் துறக்கவேண்டும்.

அவ்வாறு அவர் செய்யத்தவறும் பட்சத்தில் மத்தியகுழுவை செயலாளர் கூட்டி ஆனந்தசங்கரியை தலைவர் பதவியிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்,

தமிழீழ விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான வரைபை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கு, வெகுவிரைவில் அந்தச்சபையை இயங்கச்செய்வதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் தீர்மானக்கப்பட்டது. (01)

### சந்திரசேகரன்....

செயலகத்தில் நேற்றுக் காலையும், மாலையும் இந்தச் சந்திப்புக்கள் நடைபெற்றன.

மலையக மக்கள் முன்னணி தலைவர் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை 9.15 மணியளவில் தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சுக்களை நடத்தினர். இந்தச்சந்திப்பு சுமார் 2 மணி நேரம் நிகழ்ந்தது.

இச்சந்திப்பில் அமைச்சர் சந்திரசேகரன், மலையக மக்கள் முன்னணி செயலாளர் எம்.சிவலிங்கம், கொழும்பு மாநகரசபை உறுப்பினர் குருசாமி, மலையக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் விஜயச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதையடுத்து, மேல்மாகாண மக்கள் முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தலைமையிலான குழுவினர் நேற்றுப் பிற்பகல் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்தனர்.

பி.ப 1.30 மணிக்கு ஆரம்பமாகிய இப்பேச்சுக்களில், வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயங்களே முக்கியமாக ஆராயப்பட்டன. நாளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் கிளிநொச்சியில் புலிகளை சந்தித்துப் பேசுவார்.

## அம்பாறை - அக்கரைப்பற்று...

மீது தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இதனையடுத்து இருபகுதியினருக்குமிடையில் நடந்த தாக்குதல்களில் 5 பேர் படுகாயமடைந்து அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் - தர்மலிங்கம் சந்திரசேகரம், கருப்பையா சுப்பிரமணியம் ஆகிய இரு தமிழர்களும், எம்.எஸ்.பரீத், எம்.ஐ.றசீத், எம்.எ.லாபீர் ஆகிய 3 முஸ்லிம்களுமே காயமடைந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, இன்று அக்கரைப்பற்றில் மட்டு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா ஆகியோருக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது. (07)

## தமிழர் - முஸ்லிம்கள்...

துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டு மூதூர் இறங்குதுறைக்குச் சென்றபோது முஸ்லிம்களால் இந்த இருவரும் வெட்டிப்படுகாயப்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை மல்லிகைத்தீவிலிருந்து மூதூருக்கு வந்த சுப்பிரமணியம் இராஜலிங்கம் (வயது 26) என்பவரும் முஸ்லிம்களால் தாக்கிப் படுகாயப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்களை அடுத்து மூதூர், மல்லிகைத்தீவு ஆகிய பிரதேசங்களில் பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளது.

இந்தச் சம்பவங்களை அடுத்து மல்லிகைத்தீவு சந்தியூடாகச் சென்ற முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல வாகனங்கள் தமிழர்களால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. திரும்பிச் சென்ற முஸ்லிம்களுக்குச் சொந்தமான லொறி ஒன்று குடைசாய்ந்த போது - அது தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்த பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர்ப்புகைக்குண்டு பிரயோகம் போன்றவற்றை மேற்கொண்டு - அங்கு கூடியிருந்தவர்களை அப்புறப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து நேற்றுப் பகல் 12 மணியிலிருந்து இன்று காலை 6 மணி வரை அப்பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக திருகோணமலை பொலிஸ் அதிகாரி தயா சமரவீர தெரிவித்தார். (04,10)

## இயல்புநிலையினை...

தமிழீழ விடுதலைப் புலிகள் மாற்று யோசனையை முன்வைக்கவுள்ளார்கள். அரசாங்கமோ, தென்பகுதி மக்களோ ஏற்றுக்கொள்ளாவிட்டால், நாடு பிளவுபடுவதை தடுக்கமுடியாமல் போய்விடும் என்று, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கு அரசாங்கம் போதிய பிரசாரங்களை மேற்கொள்ளவில்லை என்று, தமிழீழ விடுதலைப் புலிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் நியாயத் தன்மை, அவர்கள் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாகத் திட்டம் என்பன தொடர்பில் அரசாங்கமோ, சமாதான சார்பு இயக்கங்களோ உரிய பிரசாரங்களை மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே தென்னிலங்கையில் சமாதானத்திற்கு எதிரான கருத்துக்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை நிவர்த்திக்கும வகையில் மலையக மக்கள் முன்னணியும், மேல்மாகாண மக்கள் முன்னணியும் சிங்களவர்களின் மத்தியில் பிரசாரம் மேற்கொள்ளவேண்டும் என்று, நேற்றைய சந்திப்பில் சு.ப. தமிழ்ச்செல்வன் கேட்டுக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த ஆலோசனையை ஆதரிப்பதாக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள் போன்ற இடங்களில் இருக்கின்ற இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் எல்லோரும் தமது சொந்த வீடுகளில் வாழும் நிலைமை ஏற்படவேண்டும் என்று அவர் தெளிவாக கூறினார்.

மலையக மக்களுடைய அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாக நிகழ்ச்சி நிரலிலேயே குறிப்பிட வேண்டும் என்று சந்திரசேகரன் வலியுறுத்தியதை தமிழ்ச்செல்வன் ஏற்றுக்கொண்டார்.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.